கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

698!
2-51.
OFFICE OF ... OF BOOKS
MADRAS

தந்தையின் கடிதம்

'கண்ணன்' ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம்; கண்ணன் கழகத்தின் மூலம் தாங்கள் குழந்தைகளின் மன வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் பேருதவி புரிந்து வருகிறீர்கள். பத்திரிகையின் மூலம் மட்டும் குழந்தைகளின் அறிவை மலரச் செய்வதுடன், நிற்காமல், தாங்கள் ஊர் ஊராகச் சென்று குழந்தைகளை ஒன்று கூட்டி, வேடிக்கை விளையாட்டுக்களின் மூலம் அவர்களைக் குதூகலிக்கச் செய்வதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்; போற்றுகிறேன். தங்கள் தொண்டு சமூகத்தையொட்டியே குழந்தைகளை வளரச் செய்யும் பேருதவியே ஆகும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று விளையாட்டாகவே போதிக்கும் பேராற்றலேயாகும்.

திருச்சியில் நடைபெற்ற கண்ணன் கழகக் கூட்டத்தின் போது அறிஞர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சொன்னது போல் வீட்டுக்கு வீடு தவழ்ந்து விளையாடும் கண்ணன்களை, 'கண்ணன்' பத்திரிகையும் கண்ணன் கழகமும் சரியான வழிகாட்டிகளாக நின்று பிற்காலத்தில் அவர்களைக் கீதாசாரியர்களாகவே விளங்க வைக்குமென்பதில் ஐயமேயில்லை,

குழந்தைகளின் முகங்களிலே, தவழும் புன்னகையிலே பேரின்பமடையும் தங்களுக்கு, மேலும் மேலும் உற்சாகத்தையும் ஊக்கத்தையும், நிகரற்ற செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் அளிக்குமாறு கண்ணபிரானை மனப்பூர்வமாக வேண்டிக்கொள்கிறேன்.

தங்கள் அன்பன்,

ஜி. எஸ். மணி, ஆதிகுடி.

தாயின் கடிதம்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நேற்று திருச்சி நாஷனல் காலேஜில் நடைபெற்ற கண்ண[illegible] கழக விழாவில் கலந்துகொண்டு அளவற்ற ஆனந்தம் அடைந்[illegible] குதூகலமாயும் வந்த உங்கள் கழக அங்கத்தினன் ஆன பாலாஜியின் அம்மா நான். இந்த மாதிரி குழந்தைகளுக்கு என்றே பிரத்தியேகமாக ஒரு கழகம் ஏற்படுத்தி, அவர்களுக்கு இந்த மாதிரி பழகச் சந்தர்ப்பம் கொடுத்து, இனிய தின்பண்டங்கள் ஈந்தும் விளையாட்டுகள் நடத்தியும் குழந்தையையும் எங்களையும் ஒருங்கே மகிழ்விக்கிறீர்கள். குழந்தைகள் மாத்திரமின்றி, பெற்றோர்களாகிய நாங்களும் பெரிதும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

கண்ணனை, குழந்தைகளைப்போலவே நாங்களும் படித்து இன்புறுகிறோம். அதுபோலவே விழாவிலும் நாங்களும் கலந்து கொண்டு குழந்தைகளோடு குழந்தைகளாய் மகிழ்வடைந்தோம்.

உங்கள் கண்ணன், பெற்றோர்களுக்கும் பிரியமான கண்ணனாகவே திகழ்கிறான். இத்தகைய கண்ணனையும் கழகத்தையும் நடத்தும் உங்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க கண்ணன்!

—பாலாஜியின் அம்மா.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 2 இதழ்: 2

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
ஒரே நாள் ஆசிரியர் - டி. எஸ். ராதாபாய் .. 4
வேடிக்கைக் கேள்விகள் 8
கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 9
சிரிக்கும் சிங்காரி - 'மணிவண்ணன்' .. 13
சின்னராஜா - 'வாசகன்' 15
கலைமான் கொம்பு - 'சோமசன்மா' .. 21
குட்டிக் கதைகள் - ராமசர்மா .. 25
ஸ்ரீ அரவிந்தர் - பி. கோதண்டராமன் .. 30
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 34
ஜக்கு துப்பறிகிறான் - 'ஆர்வி' 37
சந்திரகாந்தன் - விக்கிரமன் 42
காமதேனு - விஜயா 50
கண்ணன் தபால் 53

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்

குடும்பச் சந்தா
ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே

குழந்தைகளே!

இந்த மாதம் உங்களுக்குச் சொல்ல எதுவும் அதிகமாய் இராது என்றே எண்ணியிருந்தேன். ஆனால், என்ன போங்கள்! எவ்வளவு சொல்வதற்கு இருக்கின்றன, தெரியுமா? அப்படியும் நான் நினைக்கிற அளவுக்குச் சொல்ல முடியுமா என்பது எனக்குச் சந்தேகந்தான்.

திருச்சியில் குடியரசு நாள் அன்று கூட்டம் நடக்கப்போகிறது என்று போன இதழிலேயே சொல்லியிருந்தேனு? அதேபோல அன்று அங்கே கூட்டம் நடந்தது. கூட்டம் நடந்த இடம் அருமையான இடம்! நேஷனல் காலேஜ் என்று கேள்விப்பட்டிருப்பீர்களே, அங்கேதான். நேஷனல் காலேஜ் பிரின்ஸ்பாலும் காரியதரிசியும் கண்ணன் கழகக் குழந்தைகளுக்காக மிகுந்த சந்தோஷத்துடனேயே அந்த இடத்தை உபயோகித்துக்கொள்ளும்படி அநுமதி யளித்தார்கள். எல்லாவித வசதிகளையும் குதூகலத்துடன் செய்து கொடுத்தார்கள்.

26-ஆம் தேதி மத்தியான்னம் முதலே காலேஜ் வாசலில் பையன்கள் கூட ஆரம்பித்துவிட்டார்கள். கூட்டம் பிரமாதமாக அமைந்து போனதற்குக் கேட்கவா வேண்டும்? பிரமாதத்திலும் பிரமாதம் போங்கள்!

திருச்சியில் உள்ள 250 அங்கத்தினர்களும் (பெண்கள் உட்பட) கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். தபாலில் அழைப்புத் தவறிப்போனவர்கள் கூட நேரில் வந்து நம்பர் கார்டைக் காட்டி, கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். புதுக்கோட்டை, ஆடுதுறை, லால்குடி, தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்துகூட பல அங்கத்தினர்கள் தம் பெற்றோர்களையும் அழைத்துக்கொண்டு கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பம் முதல் முடியும் வரை அங்கத்தினர்களிடையே ஒரே ஆட்டமும் பாட்டமும், வேடிக்கையும் விளையாட்டும் தான்!

சரியாக நாலு மணிக்கெல்லாம் விழா ஆரம்பமாயிற்று. ஆரம்பம் என்றால் எதிலிருந்து என்று கேட்கிறீர்களா? டிபனிலிருந்துதான். பையன்களும் பெண்களும் வரிசை வரிசையாக வந்து உட்கார்ந்து ஜாங்கிரி பிளேட்டையும் மிக்சர் தட்டையும் சத்தப்படுத்தாமல் சாப்பிட ஆரம்பித்தார்கள். வாழைப் பழத் தோல்களைக்கூடக் கண்ட இடத்தில் போடவில்லை. சாப்பிட்டு முடிவதற்குள் டீ வந்துவிட்டது! ஒரு பந்தி சாப்பிட்டுவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டே வெளியில் வர, மற்றொரு பந்தி வயிற்றைப் பிடித்துக்கொண்டே உள்ளே நுழைந்தது. இந்தக் காட்சிகளின் படங்களையெல்லாம் நீங்கள் அடுத்த இதழில் பார்ப்பீர்கள். (இந்த இதழில் அவற்றை வெளியிட அவகாசமோ இடமோ இல்லை.) அடுத்த நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டிகள். ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி யடைந்தவர்களைக் குறித்துக்கொண்டோம். திடீரென்று பூனை கத்துவதுபோலவும், செம்மறியாடுகளும் வறட்டுத்

தவளைகளும் கத்துவதுபோலவும் மேடையிலிருந்து சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால், விகடக் கச்சேரி! சிரித்துச் சிரித்துக் குழந்தைகளுக்கு வயிறு வெடித்து விட்டது. குழந்தைகளுக்கு மட்டுமா? அங்கு வந்திருந்த பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் கூடத்தான்.

பிறகு அருமையான பிரசங்கம் ஒன்று! பேசியவர் கலைமகள் ஆசிரியர், ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன். குழந்தைகளுக்கு முன் பகுதியும் பெரியோர்களுக்குப் பின் பகுதியுமாக அவர் ஜமாய்த்துவிட்டார்!

அடுத்தபடியாக, விழாவுக்குத் தலைமை வகித்த நேஷனல் காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ நாராயண ஐயங்கார் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர். குழந்தைகள் எழுந்து செல்லுகையில் சும்மா போகலாமா? அதற்காகத் தலைக்கு ஒரு பெப்பர்மின்ட் பொட்டலம் கொடுத்தனுப்பினோம்!

பரிசு பெற்றவர்களின் விவரம்:

முதல் பகுதி

முதல் பரிசு: R. கேசவலு (K. 396) - பாகடெல்லி போர்டு.

இரண்டாம் பரிசு: பட்டாபிராமன். (P. 101) - குளோப்.

இரண்டாம் பகுதி

முதல் பரிசு: T. S. சடகோபன் (S. 660)-இப்பி என்ற விளையாட்டுக் கருவி.

இரண்டாம் பரிசு: S. பால சுப்பிரமணியன் (B.214)-வாட்டர் கலர் பாக்ஸ்.

மூன்றாம் பகுதி

முதல் பரிசு: S. சின்னதுரை (S. 119) - டில்லி-டாலி.

இரண்டாம் பரிசு: S. ஸ்ரீநிவாஸன் (S. 55)-கிரிக்கெட்போர்டு.

பெண்கள் முதல் பகுதி

முதல் பரிசு: S. ராஜலக்ஷ்மி (R. 652) - நூல் பின்னும் ஸுயிங் பாக்ஸ்.

இரண்டாம் பரிசு: T. R. வசந்தலக்ஷ்மி (V. 297) - கயிறு தாண்டும் ஸ்கிப்பிங் ரோப்.

இரண்டாம் பகுதி

முதல் பரிசு: A. G. விசாலாக்ஷி (V. 95) - வேர்ட் பில்டர்.

இரண்டாம் பரிசு: S. ரங்கநாயகி (R. 653) - மணி வைத்த ஸ்லேட்.

இந்தத் தடவை மெக்கானோ பரிசைத் தட்டிக் கொண்டு போகும் குழந்தையின் பெயர் சௌ. T. S. ராதாபாய் (R. 297). இவளுக்கு வயது 13 தான். இந்தப் போட்டிக்கு மொத்தம் 643 கட்டுரைகள் வந்திருந்தன. சில நல்ல கட்டுரைகள் எழுதியவர்களின் பெயர்களை வரிசைக்கிரமமாக எழுதியிருக்கிறேன். இவர்களுடைய கட்டுரைகளைக் கண்ணனில் வெளியிடாவிட்டாலும் இவர்கள் எல்லோருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த அடுத்த போட்டிகளில் மற்றவர்கள் சிறப்பாக எழுதி முதல் பரிசையே தட்டிக் கொண்டு போவார்கள் என்று நம்புகிறேன்.

(1) எம். மோகன் (M. 100), எழும்பூர். (2) C. வசுமதி (V. 23), சிதம்பரம். (3) எம். எஸ். காமாக்ஷி, (K. 388), சென்னை-1. (4) K. ராமலிங்கம் (R. 252), திருமங்கலம். (5) N. ஸ்ரீநிவாஸன் (S. 406), கீழக்கரை. (6) P. சீதா (S. 57), கோட்டூர்.

—ஆசிரியர்.



ஒரே நாள் ஆசிரியர்

T. S. ராதாபாய் (R. 297 கண்ணன் கழகம்)

நான் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியர் ஆனால் என்ன செய்வேன்?

நானும் அதைத்தான் நினைத்துப் பார்க்கிறேன்? என்ன, என் கனவு நினைவாகுமா? 'ஆசிரியர் நம் கதைகளை ஏன் போடுவதில்லை? ஆயிரம் தடவை படித்ததைப் போன்ற கதைகளையே திருப்பித் திருப்பிப் போடுகிறாரே! அவர் ஓர் எழுத்தாளராக இருந்து நாம் ஓர் ஆசிரியர் ஆக இருந்தால்?' என்று எண்ணமிடுவோம். மேலும், ஆசிரியர் நம் கண்களில் படாமல் தப்பினாரோ, பிழைத்தாரோ! நமக்கு அவ்வளவு ஆத்திரம் உண்டாகிறது. என் ஐந்து வயதுத் தம்பி முதல் என் அண்ணன் வரை எல்லோரும் தம் பெயர் பத்திரிகையில் வர வேண்டும் என்று ஆசைப்படுவார்கள். ஒவ்வொரு தடவையும் இவர்கள் அனுப்புகிற கதை திரும்பிவிடுகிறது. ஏன், நான் அனுப்புவது கூடத்தான். அப்போது நாம் ஓர் ஆசிரியராக இருந்தால் என்ன என்ற எண்ணம் மேலெழும். ஹாய்யாக நாற்காலியில் அமர்ந்து, கதைகளைக் குப்பையில் கிழித்துக் கிழித்துப் போடலாம். "நாமார்க்கும் குடியல்லோம்" என்பதுபோல் நாம் யாருக்கும் தலை வணங்கிக் கதை அனுப்ப வேண்டாமே! அதுவே ஒரு பெரிய பாக்கியந்தானே!

அராபிக் கதைகளில், 'நான் அரசன் ஆனால் என்ன செய்

வேன்?' என்று எண்ணியவனுக்கு அரச பதவி கிடைத்தது போல் ஒரு நாள் நான் திடீரென்று ஆசிரியரானால் என்ன செய்வேன் என்று சிந்திக்கும்பொழுது 'அரும்பு' ஆசிரியரிடமிருந்து என்னை அப்பத்திரிகையின் ஆசிரியராக இருக்குமாறும் தாம் வேலையிலிருந்து நீங்கப் போவதாகவும் கடிதம் வந்தது. தார். இவள்தான் மல்லி, அரும்பின் ஆசிரியர் என்று சிநேகிதர்கள் கூறும்பொழுது எனக்கு ஒரு மதிப்புத்தானே? ஆசிரியர் என்ற பெயரிலே தான் என்ன மதிப்பு இருக்கிறது! இனிமேல் இவள் தமிழ்ப் பாடங்களில் தேன்மாரி பொழிவாளே என்ற பேச்சுக்களைச் சகஜமாக எல்லோரும் பேசிக் கொள்வார்கள்.

ஆம்! ஏதோ சொல்லப் போய் ஆசிரியர் டயரி எழுதத் தொடங்கிவிட்டேனே! இது என்ன? கத்தை கத்தையாக அடுக்கி வைத்திருக்கிறதே! அப்பொழுது ஆபீஸ் பையன் உள்ளே வந்து, "அம்மா, இவை எல்லாம் இன்றைய தபால்" என்றான். ரொம்ப பாரமான சமாசாரம் தாங்கியவைதான்! அப்பாடி! ஒருவாறு படித்து முடித்தேன். அதற்குள் நாலு கப் காப்பியை உள்ளே விழுங்கி இரண்டாவது ஆஸ்ப்ரோவையும் விழுங்கியாகிவிட்டது. ஒரு கதையாவது திருப்தி அளிக்கவில்லையே! சுவாரசியமாயும் இல்லையே! ஆம்! அதற்குக் காரணம் ஒன்றுதான். எல்லாம் படித்துப் படித்துச் சலித்துப்போன கதைகள்தான். ஏன், போனவாரம் 'போண்டா'வில் வந்ததை இந்த வாரம் யாரோ துணிச்சலாக அனுப்பியிருக்கிறார்களே! ஆனால், பாவம், இந்த இளம் எழுத்தாளர்கள் என்ன செய்வார்கள்? அதற்கு நானே ஒரு வழி கண்டு பிடித்தாக வேண்டும்!

முதலில், "எழுத்தாளர்களுக்கு ஒரு விண்ணப்பம். காப்பி செய்து கட்டுரைகளை அனுப்புங்கள். உடனே வெளியிடுவோம். உரிய சம்மானம் கிடைக்கும். ஆனால் கவரின் மேல், 'காப்பிக் கதை' என்று எழுதத் தவறாதீர்கள். தப்பித் தவறி யாருக்காகிலும் ஒரு புதிய கற்பனை தோன்றினால் அதையும்தான் அனுப்பி வையுங்களேன். ஆனால் கவரின் மேல் 'கற்பனைச் சித்திரம்' என்று குறிப்பிடத் தவறாதீர்கள்" என்று பெரிய எழுத்தில் விளம்பரம் செய்துவிடுவேன். அப்புறம் கதைகளைப் பொறுக்கு

வதில் எனக்கு ஒரு சிரமமும் இருக்காது பாருங்கள்!

பத்திரிகை என்ருல் வெறும் கதையைத்தான் பிரசுரிக்க வேண்டும். ஆனல் நான் ஆசிரியர் ஆனல் ராஜா மந்திரி கதைகளைப் பிரசுரிக்காமல், ஜவாஹர், ராஜன் பாபு போன்ற பெரிய தேசியத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகளையும், பாரதம், ராமாயணம் போன்ற பெரிய புராணக் கதைகளையும் தொடர்ச்சியாக வெளியிடுவேன். இந்தக் காலத்தில் பாடத்

திட்டத்தில்தான் இவை எல்லாம் இல்லையே. பாரத-ராமாயணக் கதைகளை அறியாச் சிறுவர்கள் அதைப்பற்றி அறிய நான் இந்தக் கதைகளையே அதிகம் போடுவேன்.

சிறுமிகளும் தங்களுக்காக ஆசிரியர் பத்திரிகையில் ஒன்றும் போடுவதில்லையே என்று ஆசிரியர் மேல் கோபம் கொள்வார்கள். ஆகையால் நான் அடுத்தபடியாகப் பெண்களுக்கு உபயோகப்படும் செய்திகளைப் பத்திரிகையில் பாதிக்குமேல் பிரசுரிப்பேன்.

பெண்களுக்கு ஆன விளையாட்டு, தையல் வேலை, சித்திரம் வரையக் கற்றுக் கொள்ளுதல், புதிய புதிய கோலங்கள் முதலியவற்றைப் பிரசுரிப்பேன்.

"எண்டி பெண்ணே, சதா சர்வ காலமும் கதைப் புஸ்தகமே படிக்கிருயே; பெண்ணுய், லக்ஷணமாய் ஏதாவது காரியம் செய்யக் கூடாது?" என்று கேட்கும் பாட்டிக்குப் பளீர் என்று, "இன்று உனக்குக் 'கப் சிப்' அல்வா பண்ணித் தரேன், பார். அதைப்பற்றித்தான் நான் இப்பொழுது படித்துக் கொண்டிருக்கிறேன்" என்று பெண்கள் பதில் சொல்லலாம்.

என் பத்திரிகையில் விஞ்ஞானம், தோட்ட வேலை, பழைய சரித்திரக் கதைகள் முதலியவற்றைப் பிரசுரிப்பேன். ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளில் இருக்கும் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துப் போடுவேன். பெரிய மனிதரின் வாழ்க்கை வரலாற்றையும் நடு நடுவே பிரசுரிப்பேன்.

"எல்லாம் நன்ருய் இருக்கிறது! இத்தனை காகிதத்துக்கு எங்கே போவது? அப்படிப் போட்டு அதற்கேற்ப விலை வைத்தால்தான் அதை யார் வாங்குவார்கள்?" என்று இதோ 'அரும்பு' பத்திரிகையின் முதலாளி முணுமுணுக்கிருர்.

ஆசிரியராகிய நான், என் கற்பனைக் கோயிலில்தான் என் எண்ணங்கள் ஈடேறக் காணலாம். ஏன், நீங்களுந்தான் இந்த மஹாபாரதத்தை யார் எழுதினது என்று தூரத்தில் தள்ளிவிடுகிறீர்கள்! அப்பா! ஆசிரியர் ஆவது மிக மிகக் கஷ்டந்தான்.

வேடிக்கைக் கேள்விகளுக்கு விடை

1. ஒன்றுதான்; ஒன்று சாப்பிட்ட பின்பு காலி வயிறு என்று எப்படிச் சொல்வது?
2. ஓ, முடியுமே! தண்ணீரைப் பனிக்கட்டியாக்கினல்.
3. ஒன்பது ரூபாய் நாலணு வித்தியாசம்.
4. பூகோளப் படத்திலுள்ள ஆறுகளில்.
5. காலம்.
6. 'நீ—ல—ம்' என்று எழுதமுடியுமே!
7. "நீ ஒரு முட்டாள்தானே?"
8. மூக்காடு.
9. புஷ்பாகம்.

வேடிக்கைக் கேள்விகள்

1. காலி வயிற்றில் நீங்கள் எத்தனை வாழைப் பழங்கள் சாப்பிட முடியும்?

2. சல்லடையில் தண்ணீரை நிறுத்தி வைக்க உங்களால் முடியுமா?

3. பத்து ரூபாய் நோட்டுக்கும் பன்னிரண்டணா ஸ்டாம்புக்கும் என்ன வித்தியாசம்?

4. எந்த ஆறுகளில் அடியோடு தண்ணீரே இருப்பதில்லை?

5. ஒரு தடவை உங்களை விட்டுப் போனால் பிறகு வரவே வராது; அது எது?

6. சிவப்பு மையால் நீலம் எப்படி எழுத முடியும்?

7. எந்தக் கேள்விக்கு 'ஆமாம்' என்று எப்போதும் பதில் சொல்லமாட்டீர்கள்?

8. எந்தக் காட்டில் மரங்களே இல்லை?

9. யாரும் பாடாத ராகம் எது?

கிரிக்கெட் கற்றுக்கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்சென்ட்

கவர் டிரைவ்
COVER DRIVE

1. பொதுவான ஆரம்ப நிலை.



2. ராம்சிங் பந்தை அடிக்கத் தயாராகிறார். கால்கள் சம அளவில் உடல் கனத்தைத் தாங்கி நிற்கின்றன.



3. மட்டையை நேராகத் தூக்கியிருக்கிறார். கண், பந்தையே கவனிக்கிறது.



4. தோள்பட்டையை நன்றாகக் கவிழ்த்துக் கொண்டிருக்கிறார். முன்னங்கால், பந்து வந்து விழும் இடத்துக்கு அருகில் இருக்கிறது.



5. முன்னங்கால்தான் உடலின் கனத்தை இப்போது தாங்குகிறது. தலை கவிழ்ந்தே இருக்கிறது. இந்த நிலைதான் பந்து வருவதைக் கவனிக்க வாகானது.

6. பந்தை அடிக்கப் போகும் திசையிலேயே முன்னங்கால் கட்டைவிரல் இருக்கிறது. தலையும் அதே திசையைத்தான் பார்த்து இருக்கிறது.



7. பந்து மட்டையில் தவருமல் படும்படி நிமிர்ந்து கொடுக்கிருர்.



8. மட்டையால் பந்தை எவ்வளவு வேகமாக அடிக்க முடியுமோ அப்படி அடிக்க அவர் பின்னங்காலை நன்ருக உதைத்துக் கொடுத்துக் கொள்கிருர்.

சிரிக்கும் சிங்காரி!

'மணிவண்ணன்'

சின்னத்தெருச் சிங்காரி
சின்னன் மகள் சிங்காரி
சின்னப் பெண் சிங்காரி
சிரிச்ச முகச் சிங்காரி!

சின்னச் சட்டி ஏந்தி வந்து
சிந்துப் பாட்டுப் பாடுவாள்!
'அன்னம் போடு, அரிசி போடு
அம்மா தாயே' என்றிடுவாள்!

என்ன வேனும் கொண்டுவந்து
சின்னச்சட்டி தன்னில் போட்டால்,
சிங்கி கொட்டிப் பாடுவாள்
சிங்காரமாய் ஆடுவாள்
பம்பரமாய்ச் சுற்றுவாள்
பந்து போலத் துள்ளுவாள்
—'களுக்'கென்று
சிரித்திடுவாள் சிங்காரி!

'இல்லை' என்று சொல்லிவிட்டாலும்
இனிய முகம் காட்டுவாள்
இனிமையாகப் பாடுவாள்
இங்குமிங்கும் ஓடுவாள்

எட்டி எட்டித் தாவுவாள்
சிட்டுப் போலத் தாவுவாள்
—'களுக்'கென்று
சிரித்திடுவாள் சிங்காரி!

எள்ளி நகை செய்த பேரை
எள்ளளவும் கோபிக்காமல்
புள்ளிமான்போல் துள்ளுவாள்
துள்ளித் துள்ளிச் சாடுவாள்
தொண்டை கிழியப் பாடுவாள்
தொழுதுவிட்டு ஓடுவாள்—'களுக்'கென்று
சிரித்திடுவாள் சிங்காரி!

சின்னத் தெருச் சிங்காரி
சின்னன் மகள் சிங்காரி
சின்னப் பெண் சிங்காரி
சிரிச்ச முகச் சிங்காரி!

சின்னராஜா

வாசகன்

"என்ன, பாடம் படிக்கலாமா?" என்று கேட்டார் வாத்தியார். சின்னராஜா வேட்டைக்குப் போய் அப்போதுதான் திரும்பி வருகிறுன் என்று அவருக்குத் தெரியாது. விளக்கு வைத்தவுடன் அவர் வந்துவிடுவார். அந்தப்படி இன்றைக்கும் வந்திருந்தார்.

பாடம் என்ற பேச்சை எடுத்தாலே சின்னராஜாவுக்கு விளக்கெண்ணெய் குடிக்கிறமாதிரி இருக்கும். "இப்போதுதான் நான் விளையாடிவிட்டு வருகிறேன். நாளைக்குக் காலையிலே படிக்கிறேனே!" என்றுன்.

வாத்தியார் புன்சிரிப்புப் பூத்தார். "மகாராஜா ஊரில் இல்லை. அவர் இருக்கிறபோது நீ எப்படி இருந்தாலும், அவர் இல்லாதபோது உன்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்வதோடு, தவருமல் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிருர். அவருடைய உத்தரவுப்படி நான் நடக்கவேண்டியவன். உனக்குப் படிக்கப் பிரியம் இல்லாவிட்டால் நான் மகாராஜாவிடம் சொல்லிவிடுகிறேன்" என்ருர். மகாராஜா என்று அவர் சொன்னது சின்னராஜாவின் அப்பாவைத்தான்.

வாத்தியாரிடம் தன்னுடைய அப்பாவுக்கு நல்ல மதிப்பு இருக்கிறதென்பது சின்னராஜாவுக்குத் தெரியும். அவர் வெறும் வாத்தியார் மட்டும் அல்ல. நன்ருகப் படித்தவர். தெய்வபக்தி உள்ளவர். அவர் சில சமயங்களில் மார்த்தாண்ட மகாராஜாவுக்கே சில அருமையான யோசனைகள் கூறுவார்.

சின்னராஜாவின் அப்பா எத்தனையோ தடவை அவனிடம், "நன்ருகப் படிக்க வேண்டும்" என்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிருர். "நான் சின்ன வயசில் படிக்காமல் வீணுகக் காலத்தைப் போக்கிவிட்டேன். இப்போது வருத்தமாக இருக்கிறது. நீ இப்போதெல்லாம் படிப்பைத் தவிர மற்ற எந்த விஷயத்திலும் கவனத்தைச் செலுத்தக் கூடாது. உனக்குக் கிடைத்திருக்கிற வாத்தியார் மிகவும் பெரியவர்; பெரிய அறிவாளி. அவரிடமிருந்து நீ சரியாகப் பாடம் படித்துக்கொண்டால் நாளைக்கு நீ ராஜாவாக ஆகும்போது மிகவும் கெட்டிக்காரனுக விளங்குவாய்" என்று அடிக்கடி சொல்வார். அதெல்லாம் சின்னராஜா காதில் விழுமா? 'அப்பா இப்போது ராஜாவாக இல்லையா? சோழராஜாவுக்கு வேண்டிய உதவியை எல்லாம் செய்யவில்லையா? அப்பாவைப் போல

வேறே ராஜா யார் இருக்கிறார்கள்? அவர் படிக்கவில்லையே! படித்தால்தான் ராஜாவாக இருக்கலாமென்றால், அப்பா படிக்காமலே ராஜாவாக இருக்கிறாரே!' என்று அவன் தன் கட்சிக்கு ஏற்ற நியாயங்களை நினைத்துப் பார்ப்பான்.

வாத்தியார் அன்று காலையில் அவனுக்குச் சில வாக்கியங்களை எழுதிக் கொடுத்திருந்தார். அந்தக் காலத்தில் காகிதம் கிடையாது. எழுத்தாணியை வைத்துக்கொண்டு ஓலையில் எழுதுவார்கள். படம் எழுதவதானால் அதற்கென்றே மெழுகு சீலைத் தயார் செய்து அதில் எழுதுவார்கள். படம் எழுதுகிற மெழுகு சீலையில் கறுப்பு வர்ணத்தில் எழுதும்படி வாத்தியார் சொல்லியிருந்தார். எழுத்தாணியில் எழுதுவதைவிட அது சுலபமானது. இதில் எழுதிப் பழகிக்கொண்டால் பிறகு எழுத்தாணியால் எழுதச் சொல்லித் தரலாமென்பது வாத்தியாருடைய எண்ணம்.

"காலையிலே கொடுத்தேனே, அந்த வாக்கியங்களை நீ எழுதினாயா?" என்று கேட்டார் வாத்தியார்.

வேட்டைக்குப் போய் முயலைத் தப்பவிட்ட துக்கத்தில் வாத்தியார் கேட்ட கேள்வி அவனுக்கு எரிச்சலை உண்டாக்கியது. "நான் எழுதவில்லை" என்று முணுமுணுத்தான்.

"அப்படியானால் நான் இனிமேல் உனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போவதில்லை" என்று கடுமையான குரலோடு வாத்தியார் சொன்னார்.

"அந்தக் கதையை நீங்கள் முழுவதும் சொல்லுங்கள். நான் கேட்டு அப்படியே சொல்லிவிடுகிறேன்" என்றான் சின்னராஜா.

அவனுக்கு எழுதப் படிக்க வணங்காதே ஒழியக் கதை கேட்பதில் பிரியம் உண்டு. அதிலும் வீர தீர சூரர்களின் கதையைக் கேட்பதில் அளவற்ற ஆசை. மகாபாரதச் சண்டையைப்பற்றி வர்ணித்துச் சொன்னால் எத்தனை மணி நேரமாக இருந்தாலும் கேட்டுக் கொண்டிருப்பான். கேட்டதை விடாமல் சொல்வான். அதோடு பாரதக் கதையில் வரும் அர்ச்சுனனைப் போல இருக்க வேண்டுமென்று எண்ணுவான். கேட்டதை ஞாபகப் படுத்திக்கொள்வதில் சாமர்த்தியம் உள்ளவன். புத்திசாலிதான்; மண்டு அல்ல. ஆனால் படிப்பதற்கு மனசு இடம் கொடுக்கிறதில்லை.

"நான் இப்போது கதை சொல்லமாட்டேன். அந்தக் கிழியை எடு, இரண்டு வாக்கியங்களைத் தப்பு இல்லாமல் எழுது" என்றார் வாத்தியார். சித்திரம், எழுத்து இவற்றை எழுதும் மெழுகு சீலையைக் கிழி என்று சொல்வது வழக்கம்.

சின்னராஜா கிழியை எடுக்கவில்லை. அது அங்கே ஒரு மூலையில் கிடந்தது. அதைக் கண்ட வாத்தியார் தாமே எடுத்து அதை விரித்தார். அதில் தலைப்பில் அவர் எழுதிய இரண்டு வாக்கியங்கள் இருந்தன. "இந்தா, இதைப் பார்தது எழுதாவிட்டாலும் போகிறது. இந்த வாக்கியத்தைப் படி, பார்க்கலாம்" என்றார்.

சின்னராஜா பரிதாபமாக அவரைப் பார்த்தான். "எழுத்துக் கூட்டிப் படித்துப் பார்" என்று பின்னும் வாத்தியார் சொன்னார். அவன் எழுத்துக் கூட்டிப் பார்த்தான். தப்புத் தப்பாகச் சொன்னான். குதிரை என்பதை மதுரை என்று வாசித்தான். வாத்தியாருக்குச் சிரிப்பு ஒரு பக்கமும் கோபம் ஒரு பக்கமும் உண்டாயின.

ராமு: ராமாயணம் வாசிக்கிறவர் எதற்காகப் பக்கத்திலே தம்புரா சுருதி வைத்துக்கொண்டிருக்கிறார்?

சோமு: காதருகில் இப்படி மீட்டிக்கொண்டேயிருந்தால் அவருக்குத் தூக்கம் வராமல் இருக்கும் என்பதற்காகத்தான்.

உபாத்தியாயர்: அடேய், 'ராமன் காட்டுக்குப் போனான்'—இது என்ன காலம்?

பையன்: (துக்கமான குரலில்) கஷ்டகாலம், ஸார்! அவன் அயோத்திலேயே இருந்திருந்தால் நல்லகாலம், ஸார்!

"நீ புத்திசாலி; வேண்டுமென்றே படிக்காமல் இருக்கிறாய். நன்றாகப் பார்த்துப் படி" என்றார் வாத்தியார். வார்த்தைக்கு வார்த்தை தப்பாகப் படித்தான் அவன். "நீ எப்போதுதான் நன்றாக எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளப் போகிறாய்?" என்று வாத்தியார் வருத்தத்துடன் கேட்டார். அவனுக்கும் சலிப்பாகவே இருந்தது. அதனால், "நான் என்ன ராயச வேலைக்கா போகப் போகிறேன்? நான் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்வானேன்?" எனறு கேட்டு விட்டான். ராயசம் என்பது குமாஸ்தா வேலைக்குப் பேர்.

வாத்தியாருக்குக் கோபம் வந்தது. "உன்னுடைய தகப்பனார் வந்த பிறகு அவரிடம் இந்தக் கேள்வியைக் கேள். வேலையற்றுப் போய் நான் உன்னிடம் வந்து வாதம் செய்வது தவறு" என்று சொல்லி அவர் எழுந்து போய்விட்டார்.

சின்னராஜாவுக்கு உள்ளூறப் பயந்தான். அவன் மனசு திக்குத் திக்கென்று அடித்துக்கொண்டது. வாத்தியார் தன் அப்பாவிடம் விஷயத்தைச் சொன்னால் நிச்சயமாக அப்பா தன்னைத் தண்டிப்பார் என்பது அவனுக்குத் தெரியும். தயை தாட்சிண்யம் இல்லாமல் பிரம்பை எடுத்துப் பளீர் பளீரென்று வாங்கிவிடுவார். இதற்கு முன் சில சமயங்களில் அப்படி அவர் கையால் உதை வாங்கியிருக்கிறான். இப்போது அதையெல்லாம் நினைத்தபோது பயமாக இருந்தது. அழுகை வரும்போலிருந்தது. சாப்பிடக்கூட வேண்டாம் என்று தோன்றியது. ஆனால் அம்மா தேடுவாளே!

கொஞ்சநேரம் கழித்து அவன் அந்தப்புரத்துக்குப் போனான். "ஏன் இவ்வளவு நாழிகை, ராஜா?" என்று கேட்டாள் அம்மா.

"வாத்தியார் வந்துவிட்டுப் போனார்" என்று மாத்திரம் சொன்னான் சின்னராஜா. அவள், பாவம், தன் பிள்ளை நெடுநேரம் படித்துவிட்டு வந்திருக்கிறான் என்று நினைத்துக் கொண்டாள். அன்போடு உணவு அளித்தாள். சாப்பிட்டுக் கொண்டே அம்மாவோடு பேசினான் சின்னராஜா. "அம்மா, அப்பாவுக்கு நன்றாகப் படிக்

கத் தெரியுமா?'' என்று கேட்டான்.

''அவருக்கு மற்ற எல்லாம் தெரியும். உன்னைப்போல அவரும் சின்னவயசில் ராத்திரியெல்லாம் படித்திருந்தால் அல்லவா படிப்பு வரும்?'' என்ருள் அவள். அவளுக்குத் தன் பிள்ளை நெடுநேரம் வரைக்கும் படித்துவிட்டு வருகிருன் என்று எண்ணம்!

''ராஜாவாக இருக்கிறவர்களுக்குப் படிப்பு எதற்கு, அம்மா?'' என்று மறுபடியும் அவன் கேட்டான்.

''உன் அப்பாவின் கௌரவத்தைக் குறைக்கக் கூடாது என்று கேட்கிருயோ? சபாஷ்! அப்படித்தான் அப்பா கட்சியில் பேசவேண்டும்'' என்ருள் அம்மா. மகாராஜாவுக்குப் பரிந்து பேசுவதாக அவள் எண்ணிக்கொண்டாள்.

'சோழ மகாராஜாவுக்குப் படிக்கத் தெரியுமோ?''

''அதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? எங்கள் சின்ன ராஜாவுக்கு, என் தங்க ராஜாவுக்கு, என் குட்டி ராஜாவுக்கு நன்ருகப் படிக்கத் தெரியும். மற்றவர்கள் படித்தால் என்ன? படிக்காவிட்டால் எனக்கு என்ன?'' என்று பெருமை தோன்ற அவள் பேசினுள். அவளுக்குத் தெரியுமா, சின்ன ராஜா வாத்தியாருக்கு முன்னே படும் பாடு?

''அப்பா எப்போது திரும்பி வருவார், அம்மா?''

''அதை யார் கண்டார்கள்? சோழ மகாராஜாவுக்குத் துணையாகப் போயிருக்கிருர். எங்கே

யுத்தம் நடக்கப் போகிறதோ? எவ்வளவு நாளைக்கு நடக்கப் போகிறதோ? இவர் இல்லாவிட்டால் சோழராஜாவுக்கு ஒன்றும் ஓடாதாம்.''

மார்த்தாண்ட மன்னர், ராஜராஜ சோழ மகாராஜாவின் கட்டளையின்படி தஞ்சாவூருக்குப் போயிருந்தார். யாரோ சில பொல்லாத சிற்றரசர்கள் சேர்ந்து சோழ மன்னருக்கு எதிராகக் கிளப்ப ஏற்பாடு நடந்து வந்தது. அந்தச் சமாசாரத்தை ஒற்றர்கள் மூலம் சோழ அரசர் தெரிந்து கொண்டார். போர் ஆரம்பிப்பதற்கு முன்னாலே அந்தத் துஷ்ட ராஜாக்களை அடக்கிவிட வேண்மென்று நினைத்தார். அது சம்பந்தமாக ஆலோசனை செய்யத்தான் மார்த்தாண்ட மன்னரை அழைத்திருந்தார். போய் இரண்டு மூன்று நாட்களாயின. இன்னும் எவ்வளவு காலம் தஞ்சாவூரில் இருப்பாரோ யாருக்கும் தெரியாது.

மார்த்தாண்ட மன்னர் ஊரை விட்டுப் போகும்போது தம்முடைய கோட்டையை நன்கு கப் பாதுகாக்கும்படி மருதப்பரிடம் ஒப்படைத்துவிட்டுப் போனார். மருதப்பரை உங்களுக்குத் தெரியுமே: அதிக மானுடைய தகப்பனார்.

அம்மாவிடம் பேசிக் கொண்டே உணவு கொண்ட பிறகு சின்னராஜா படுக்கப் போய்விட்டான். படுக்கையில் படுத்தானே ஒழிய அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. வாத்தியாரைப் பற்றி நினைத்த போதெல்லாம் அவனுக்கு என்னவோ மாதிரி இருந்தது. 'அப்பா வந்து என்ன சொல்வாரோ! நாளைக்கு வாத்தியார் பாடம் சொல்லிக் கொடுக்க வருவாரோ மாட்டாரோ? வராவிட்டால் நல்லதாய்ப் போயிற்று! நாம் சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு வேட்டையாடப் போக வேண்டியதுதான். இன்றைக்கு ஏமாந்து போனது போல நாளைக்கு இருக்கமாட்டேன்' என்று யோசனை பண்ணிக்கொண்டே இருந்தவன் அப்படியே தூங்கிவிட்டான்.

(தொடரும்)

கல்லிலே காய்க்கும் பூ;
காசி நீர் ஆகும் பூ
காய்த்தால் மலரும் பூ;
என்ன பூ?
பூவிலே வெள்ளைப் பூ;
என்ன பூ?



கலைமான் கொம்பு

'சோமசன்மா'

ஒரே ஒரு காட்டில் முன்னொரு காலத்தில் ஒரு பெரிய கலைமான் இருந்தது. கலைமான் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதற்குக் கொம்புகள் பெரியவையாய் இருக்கும். ஒவ்வொரு கொம்பிலும் நிறையக் கிளைகள் இருக்கும். பார்ப்பதற்கு உயரமாகவும் ரொம்ப அழகாகவும் இருக்கும்.

ஒரு நாள் அது தண்ணீர் குடிப்பதற்காக ஒரு குளத்தங்கரையை அடைந்து தண்ணீருக்குள் குனிந்து பார்த்தது. தண்ணீருக்குள் பார்த்தால் நம்முடைய நிழல் தெரியும் அல்லவா? அதைப்போலவே அந்தக் கலைமானுக்கும் அதனுடைய நிழல் தெரிந்தது. தன்னுடைய முகத்தையும் அதற்குமேல் தெரிந்த நீண்ட கிளைக் கொம்புகளையும் பார்த்ததும் அதற்கு ஆச்சரியமாய் இருந்தது. இதுவரையில் அது தண்ணீருக்குள் தன் நிழலைப் பார்த்ததேயில்லை. அதனால் தான் அதற்கு ஆச்சரியமாய் இருந்தது.

"இவ்வளவு அழகான கொம்புகள் நமக்கு இருக்கின்றனவே. அது நம்முடைய அதிருஷ்டந்தான். நம்மைவிட அழகானவன் இந்த உலகத்திலேயே கிடையாது!" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டது.

பிறகு அந்தக் குளத்தில் பூத்திருந்த அல்லிப்பூவைப் பறித்துத் தன் கொம்பில் வைத்துக்கொண்டு உல்லாசமாக, "என்னைவிட அழகு எவனும் இல்லை" என்று இந்துஸ்தானி ராகத்தில் பாடிக்கொண்டே போயிற்று.

அப்படி அந்த மான் போய்க் கொண்டிருக்கும்போது பின்புறமாக, சரசரவென்று ஒரு சத்தம் கேட்டது. திடுக்கிட்டுப் போன மான் பாட்டை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்ததும் அங்கே யார் வந்தது என்று நினைக்கிறீர்

கள்? ஒரு வேடன் வந்தான். அந்த மானைக் கொல்லத்தான்.

வேடனைக் கண்டதும் மானுக்கு எப்படி இருக்கும்? உடம்பெல்லாம் கிடுகிடென்று நடுங்கிற்று. தலைகால் தெரியாமல் ஒரே ஓட்டமாக ஓடத் தொடங்கிற்று. குளம், குட்டைகள், செடிகள், புதர்கள், எல்லாவற்றையும் தாண்டிக்கொண்டு தாவித் தாவி ஓடிற்று.

அப்படி ஓடிக்கொண்டிருக்கும்போது வழியில் ஒரு கருவேலங்காடு வந்தது. கருவேலங்காடு என்றால் உங்களுக்குத் தெரியுமா? அதுதான், நிறைய முள்கள் இருக்கும். கிளைகள் எல்லாம் ஆள் உயரத்துக்குமேல் இருக்காது. ஒரே புதராக மண்டிக் கிடக்கும். அதற்குள் நீங்கள் போனால் முள் உங்கள் சட்டையில் மாட்டிக்கொண்டு உங்களை ஓடவிடாது.

நம்முடைய மான் ஓடுகிற வேகத்தில் கருவேலங்காட்டைப் பார்க்காமல் அதற்குள் நுழைந்துவிட்டது. அதனால் என்ன ஆயிற்று? முள் செடிகள் மானின் உயரமான கொம்புகளை மாட்டிப் பிடித்துக்கொண்டு விட்டன. மானுக்கு ஓட முடியவில்லை. அதற்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தது. ஏனென்றால் வேடன் கொஞ்ச நேரத்தில் வந்து அதைக் கொன்றுவிடுவான் அல்லவா? அதனால்தான் அது பேந்தப் பேந்த விழித்தது.

அப்போது அதன்கூடவே பறந்து வந்த ஒரு பட்டாம்பூச்சி அதைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தது.

கிழவர்: (ஏரோப்ளேனை ஓட்டும் பைலட்டைப் பார்த்து) எங்களைப் பத்திரமாகக் கீழே கொண்டு வந்து இறக்கிவிடுவாய் அல்லவா?

பைலட்: கண்டிப்பாய் இறக்கிவிடுவேன். நான் இதுவரை யாரையும் மேலே விட்டுவிட்டு வந்ததேயில்லை.

அதைப் பார்த்த மான், "ஏண்டா சிரிக்கிருய்?" என்று கேட்டது.

வண்ணுத்திப் பூச்சி சொல்லும்: "இல்லே, மாமா! கொஞ்ச நேரத்துக்கு முன்னுல் குளத்தங்கரையில் உங்கள் கொம்புகளைப் பார்த்து ரொம்ப அழகாயிருப்பதாய் நினைத்தீர்களே! இப்போது அதே கொம்பினுல்தானே உங்களுக்கு ஆபத்து வந்து விட்டது? அதனுல்தான் சிரித்தேன்."

மான் சொல்லும்: "போடா முட்டாளே! எனக்கு ஆபத்து வந்து விட்டது என்ருல் அதற்கு என் கொம்பு என்ன செய்யும்? அதனுல் கொம்பு அழகாயில்லே என்று

அர்த்தமா? நான் இந்தப் பாழாய்ப்போன கருவேலங் காட்டைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் ஒதுங்கிப் போயிருப்பேன்.

பட்டாம்பூச்சி: அது சரி, மாமா! இப்போது வேடன் வந்தால் என்ன செய்வீர்கள்?

மான்: வந்தால் என்ன! உயிர்தானே போகும்? என்றைக்கு இருந்தாலும் சாகப் போகிறோம்.

பட்டாம்பூச்சி: உங்களுடைய அழகு உங்களைக் காப்பாற்றுது. அதைத்தான் சொன்னேன்.

இப்படி அவை இரண்டும் பேசிக்கொண்டிருக்கையிலேயே வேடன் வந்து விட்டான். வந்ததும் ஒரு பெரிய கயிற்றைப் போட்டு மானைக் கட்டினான். அப்போது மான் அவனைப் பார்த்துக் கேட்கும்: "அப்பா வேடா, என்னை எதற்காகப் பிடிக்கிறாய்?"

வேடன்: உன்னைப் பிடித்துக்கொண்டு போனால் நிறையப் பணம் கிடைக்கும்.

மான்: அது எப்படி?

வேடன்: பட்டணத்தில் 'உயிர்க் காலேஜ்' இருக்கு. அங்கே கொண்டு போய் விற்றால் இருபது ரூபாய் தருவார்கள். அதற்காகத்தான் பிடித்துக்கொண்டு போகப் போகிறேன்.

அப்போது மான், "என்னைப் பிடித்துக்கொண்டு போவதற்குப் பதிலாக என்னுடைய அழகான கொம்புகளை வெட்டிக்கொண்டு போ. அதற்கு இன்னும் அதிகமான பணம் கிடைக்கும். என்னையே கொண்டுபோனால் எனக்குத் தீனிச் செலவு வேறு ஆகும். அந்தக் காசும் உனக்கு மிச்சம் ஆகும்" என்றது.

இதைக் கேட்ட வேடன் சற்று நேரம் யோசனை பண்ணினான். பிறகு மான் சொல்வது சரியென்றே பட்டது அவனுக்கு. உடனே கத்தியை எடுத்து மானின் இரண்டு கொம்புகளையும் வெட்டி எடுத்துக்கொண்டு அங்கிருந்து சென்று விட்டான். மான் உயிர் பிழைத்தது கடவுள் புண்ணியம் என்று அங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓட்டம் எடுத்தது.

ஆகையால் பிள்ளைகளே! அழகு இருந்தால் அவர்களுக்கு எப்போதும் ஆபத்து வரும் என்று சொல்ல முடியாது என்பதும், சில சமயங்களில் அந்த அழகே அவர்களுடைய உயிரைக் காப்பாற்றும் என்பதும் இதனால் தெரிகின்றன அல்லவா?

குட்டிக் கதைகள்

ராமசர்மா

கோரைக்குல்லாய்

ஓர் ஊரில் ஒரு பணக்காரப் பிரபு இருந்தான். அவனுக்கு மூன்று பெண்கள் இருந்தார்கள். ஒரு நாள் அவர்களை அழைத்து, தன்னிடம் அவர்களுக்கு எவ்வளவு அன்பு இருக்கிறது என்று ஒவ்வொருவராகக் கேட்டான்.

மூத்தவள், "என் உயிரைவிட மேலாக உங்களை மதிக்கிறேன், அப்பா!" என்றாள். இரண்டாம் பெண், "அப்பா, இந்த உலகம் முழுவதும் எனக்குக் கிடைப்பதானாலும் உங்களுக்கு ஈடாகாது" என்றாள். கடைசியில் மூன்றாம் பெண்ணைக் கேட்டான். அவள், "அப்பா, பலகாரம் உப்பை எப்படி விரும்புமோ அப்படி உங்களை நான் விரும்புகிறேன்" என்று பதில் சொன்னாள்.

அதைக் கேட்ட பிரபுவுக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே, "நீ என் வீட்டில் இருந்தும் என்னிடம் அன்பாயில்லை. இங்கிருந்து போய்விடு!" என்று அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளிக் கதவைச் சாத்திவிட்டான்.

பாவம், அந்தப் பெண் வெளியில் சாலையோடு வெகுதூரம் நடந்து போனாள். அங்கே கோரைகள் போர் போராகக் குவிக்கப்பட்டிருந்தன. அவைகளை எடுத்து ஒரு பெரிய சட்டையும் குல்லாயும் முடைந்து அந்தக் கோரைச் சட்டையையும், கோரைக்குல்லாயையும் போட்டுக்கொண்டு போனாள். ஏனென்றால், அவள் மிக அழகாக இருப்பாள். அதோடு தான் போட்டிருந்த விலை உயர்ந்த ஆடைகளை மறைத்துக்கொள்ளவே அப்படிச் செய்தாள். கடைசியில் அவள் ஒரு ஜமீன்தார் வீட்டை அடைந்து அங்கே போய், பாத்திரம் துலக்கும் வேலைக்காரியாக அமர்ந்தாள். அவளைப் பார்த்த எல்லாரும் கோரைக்குல்லாய் என்று அவளைக் கூப்பிட்டார்கள்.

ஒரு நாள் அந்த ஊரில் ஒரு பெரிய நடனம் நடந்தது. அதைப் பார்க்க வீட்டில் உள்ள வேலைக்காரர்கள் எல்லாம் போனார்கள். நம்முடைய கோரைக்குல்லாய் மட்டும் களைப்பாய் இருக்கிறது என்று சொல்லி வீட்டிலேயே படுத்துக்கொண்டாள்.

ஆனால் அவர்கள் போன பின் அவள் தன் குல்லாயையும் சட்டையையும் கழற்றி எறிந்துவிட்டு நடன மண்டபத்துக்குப் போனாள். அங்கே அவளைவிட அழகான பெண் யாருமே இல்லை.

அந்த நடனத்தில் ஆட வந்திருந்த ஜமீன்தார் மகன் அவளைக் கண்டதுமுதல் அவள்கூட ஆடத் தொடங்கினான். வைத்த கண் எடுக்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். பார்த்தவர்கள் பிரமிக்கும்படியாக இருவரும் ஆடினார்கள்.

ஆட்டம் முடிந்ததும் கோரைக்குல்லாய் அங்கிருந்து நழுவி எல்லாருக்கும் முன்னால் வீட்டுக்கு வந்துவிட்டாள். வந்ததும் ஒன்றும் அறியாதவள் போல, தன் கோரைக்குல்லாயை அணிந்துகொண்டு தூங்கத் தொடங்கினாள்.

மறுநாள் காலையில் மற்ற வேலைக்காரப் பெண்கள் அவளிடம், "நீ நேற்று வரவில்லையே! அங்கே யாரோ ஓர் அழகான பெண் வந்து ஆடினாள். எவ்வளவு அழகாய் இருந்தது!" என்றார்கள்.

கோரைக்குல்லாய், "அப்படியா?" என்றாள்.

அன்று மாலையிலும் நடனத்துக்கு எல்லாரும் போகும் போது கோரைக்குல்லாய் வரவில்லை என்று சொல்லிவிட்டாள். ஆனால் முதல் நாள் போலவே எல்லாரும் போனபின் தன் சுய உருவில் போனாள். ஜமீன்தார் மகன் இன்றும் அவளை நெருங்கி அவளுடன் சேர்ந்து ஆடினான். அவளை எவ்வளவோ கேட்டும் அவள் தன் பெயரை வெளியிடவில்லை. ஆனால் போகும்போது தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி அவள் விரலில் போட்டான். நாட்டியம் முடிந்ததும் அன்றும் அவள் முன்போலவே வந்து படுத்துவிட்டாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் ஜமீன்தார் மகன் அந்த அதிசயப் பெண்ணைத் தேட ஊரெங்கும் ஆள் விட்டான். ஆனால் அவளைப்பற்றிய தகவலே கிடைக்கவில்லை. அதனால் அவனுடைய உடம்பு மெலியத் தொடங்கியது.

ஒரு நாள் எஜமானுக்காகச் சமையற்காரி கஞ்சி வைத்துக் கொண்டிருந்தாள். அங்கே போன கோரைக்குல்லாய், "என்ன?" என்று கேட்டாள். சமையற்காரி, "நோயாய்ப் படுத்திருக்கும் எஜமானுக்காகக் கஞ்சி வைக்கிறேன்" என்று சொன்னதும் அவள், "அதை நான் வைக்கிறேன்" என்றாள். எப்போதும் சோம்பேறியான சமையற்காரி, "சரி" என்று சொன்னாள்.

கோரைக்குல்லாய் கஞ்சியை வைத்து, எஜமான் தன்னிடம் கொடுத்த மோதிரத்தை அதற்குள் போட்டு அனுப்பினாள்.

கஞ்சியைக் குடித்த ஜமீன்தார் மகன் சமையற்காரியை நோக்கி, "இது யார் வைத்தது?" என்றான். சமையற்காரி பயந்துகொண்டே, "நான்தான் வைத்தேன்" என்றாள்.

ஆனால் எஜமான், "நீ வைக்கவில்லை; உள்ளதைச் சொல். உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்று சொன்னதும் சமையற்காரி உள்ளதைச் சொன்னாள்.

கோரைக்குல்லாய் அழைத்து வரப்பட்டதும் அவளைப் பார்த்து ஜமீன்தார் மகன், "கஞ்சியில் கிடக்கும் மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டான்.

அவள், "மோதிரத்துக்குச் சொந்தக்காரரிடமிருந்து பெற்றேன்" என்று சொன்னாள்.

"நீ யார்?"

"இதோ பாருங்கள்."

உடனே அவள் தன் கோரை ஆடைகளை எடுத்தாள். தன் சுய உருவத்தில் அவன் எதிரில் நின்றாள்.

அவளைக் கண்ட ஜமீன்தார் மகனுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இருவருக்கும் விவாகத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கல்யாணத்தன்று விருந்துக்கு வந்த எல்லாருக்கும் உப்புப் போடாத ஆகாரமே

தயார் செய்யவேண்டும் என்று கோரைக்குல்லாய் உத்தரவிட்டிருந்தாள்.

அவளுடைய தந்தையும் அந்தக் கல்யாணத்துக்கு வந்திருந்தார். எல்லாரும் உப்பு இல்லாத சாப்பாட்டைக் கண்டதும் முகத்தைக் கோணிக்கொண்டார்கள். அப்போது அவளுடைய தந்தை சொன்னார்: "என்னுடைய மகள் முன்பு ஒரு நாள் பலகாரத்துக்கும் உப்புக்கும் இடையே எவ்வளவு நெருங்கிய உறவு இருக்கிறதோ அவ்வளவு அன்பு ,நம்மிடையே இருக்கிறது என்றாள். அதற்காக அவளை வீட்டை விட்டுத் துரத்தினேன். இப்போதுதான் தெரிகிறது, அவள் சொன்னதன் உண்மை. இப்போது அவள் எங்கு இருக்கிறாளோ?"

அதைக் கேட்ட கோரைக்குல்லாய் ஓடிவந்து அப்பா காலில் விழ எல்லாரும் சந்தோஷமாய் இருந்தார்கள்.

.—இங்கிலாந்துக் கதை.

நார்ஸிஸஸ்

நார்ஸிஸஸ் ரொம்பவும் கர்வம் உள்ள அழகன். அவன் ஒரு நாள் ஓர் ஓடையருகில் போய்க் குனிந்து பார்த்தான். அதில் ஓர் அழகான உருவம் தெரிந்தது. அது தன்னுடைய உருவம் என்று அவனுக்குத் தெரியாது. அது ஓர் அழகான பெண்ணின் உருவம் என்று எண்ணி அதையே பார்த்துக் கொண்டு ஓடைக்கரையிலேயே உட்கார்ந்திருந்தான்.

அவளைப் பார்த்துச் சிரிப்பான்; அவளும் சிரிப்பாள். கையை நீட்டிப் பேசுவான்; அவளும் கையை நீட்டிப் பேசுவாள். அவளைக் கரைக்கு வரும்படி மன்றாடிக் கேட்பான். இப்படி இருக்கையில் சில சமயம் காற்றடித்து ஓடைநீர் கலங்கியிருக்கையில் அவள் உருவம் தெரியாது. அப்போது எல்லாம் தன்னுடைய காதலி தன்மேல் கோபம் கொண்டு போய்விட்டாள் என்று நினைப்பான்.

இப்படியே அவளுக்காக ஓடைக்கரையிலேயே மாதக் கணக்காக அன்ன ஆகாரமின்றி அவன் உட்கார்ந்திருந்தான். உடம்பு மெலிந்து இறந்தான்.

தேவர்கள் அவன் உடலை ஓர் அழகிய புஷ்பச் செடியாக மாற்றினார்கள். அதற்குப் பெயர் நார்ஸிஸஸ்தான். இப்போது அந்தச் செடி ஓடைக்கரைகளில்தான் முளைக்கும். —கிரேக்கக் கதை.

படி அளக்கும் பெருமாள்

ஒரு நாள் ஓர் ஏழைப் பெண் வேலை தேடிக்கொண்டு ஒரு பணக்காரக் கிழவன் வீட்டை அடைந்தாள்.

அவளைக் கண்ட கிழவன், "நான் சொல்லுகிறபடி நடந்தால் வேலை தருவேன்!" என்றான்.

சிறுமி சரியென்றாள். கிழவன் தன்னைச் சுட்டிக்காட்டி, "என்னை என்ன சொல்லி அழைப்பாய்?" என்றான்.

"எசமான் என்று!"

கிழவன், "அது தவறு. என்னைப் படி அளக்கும் பெருமாள் என்றுதான் சொல்ல வேண்டும்" என்று சொல்லி ஒரு பூனையைக் காட்டி, "இதன் பெயர் என்ன?" என்றான். பெண், "பூனை" என்றாள்.

கிழவன், "தவறு; இதன் பெயர் மார்ஜாரம்" என்றான். பிறகு நெருப்பைக் காட்டி, "இது என்ன?" என்று கேட்டான். பெண், "நெருப்பு" என்றாள்.

கிழவன், "தவறு; இது அக்கினிபகவானின் அவதாரம்" என்றான். பிறகு படுக்கையைக் காட்டி, "இது என்ன?" என்று கேட்டான். பெண், "படுக்கையில்" என்றாள்.

கிழவன், "தவறு. இது அம்சதூளிகா மஞ்சம்" என்றான். பிறகு தன் வீட்டைக் காட்டி, "இது என்ன?" என்று கேட்டான். பெண், "வீடு" என்றாள். கிழவன் உடனே மறுத்து, "இதன் பெயர் திருமகள் உறைவிடம்" என்றான்.

அதன் பிறகு ஒரு நாள் கிழவன் தூங்குகையில் வேலைக்காரப் பெண் ஓடிவந்து, "படி அளக்கும் பெருமாளே! போச்சு! மார்ஜாரம் தன் வால்நுனியில் அக்கினிபகவானின் அவதாரத்தை வைத்துக்கொண்டு திருமகள் உறைவிடத்துக்குத் தீ வைத்து விட்டது. அம்சதூளிகா மஞ்சத்திலிருந்து சீக்கிரம் எழுந்திருங்கள்!" என்று கூவினாள். கிழவன் விழி விழி என்று விழித்தான்.

ஸ்ரீ அரவிந்தர்

பி. கோதண்டராமன்

ஸ்ரீ அரவிந்தர் உலக மகா புருஷர்களில் ஒருவர். அவர் இளமைப் பருவத்திலேயே பேரறிஞராக விளங்கினார். உயரிய நூல்கள் பல எழுதினார். அழகிய காவியங்கள் பல பாடினார். பராசக்தியின் வடிவமாகிய நம் பாரத நாட்டின் விடுதலைக்காகப் பதவி, குடும்ப சுகங்கள் முதலியவற்றைத் துறந்து சுதந்தரப் போரில் தீவிரப் பங்கு எடுத்துக்கொண்டார். அரசியலில் ஈடுபட்டிருக்கையிலேயே ஆத்ம சாதனையும் செய்தார். கண்ணனை நினைந்து நினைந்து அவன் அருளால் அவன் திவ்ய தரிசனம் பெற்றார். பிறகு அரசியலிலிருந்து விலகித் தவ நாடாகிய நம் தமிழ் நாட்டில் குடியேறி, தீவிர யோக சாதனையில் ஈடுபட்டார். மனத்திற்கு எட்டாத ஆத்மிக உண்மைகளைத் தம் உள்ளத்தில் கண்டு தெளிந்தார். வேத கால மகரிஷிகளைப் போன்று மகாஞானியாக விளங்கினார். இவ்வுலகைத் துறக்காமல் இங்கேயே உருமாறுதல் அடைந்து தெய்விக வாழ்க்கை வாழும் வகையை மக்களுக்குப் போதித்தார். இம்மானிட உடலிலேயே உத்தமனைக் கண்டு நித்தம் அவனுடன் உறவாடின அவருடைய உடல் பொன்மேனி பெற்றது. மாண்டபின் நான்கு நாட்கள் வரையிலும் அவர் சடலம் சிதையாமல் ஒளி வீசியது எனில், அவரது மகிமையை என்னென்று கூறுவது! தாம் அடைந்த பெரும் பயனைப் பிறரும் அடைய முடியும் எனக் காட்டிச் சென்றார் அவர்.

ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதரித்த 36 ஆண்டுகளுக்குப் பின், அதாவது, 1872-ஆம் ஆண்டு, ஆகஸ்ட்

மாதம் 15-ஆந் தேதியன்று, கல்கத்தாவில், டாக்டர் கிருஷ்ண தன கோஷுக்கும் சுவர்ணலதா தேவிக்கும் மூன்றாவது குமாரராகப் பிறந்தார்.

தந்தை கிருஷ்ணதன கோஷ் ஆங்கிலக் கல்வியையே முற்றும் பெற்றவர். அக்கால இள வங்காளிகளைப் போலவே அவரும் நடையுடை பாவனை, கலாசாரம், நாகரிகம் ஆகியவற்றில் ஐரோப்பிய முறையையே மேற்கொண்டு ஒழுகினார். தம்மைப் போலவே தம் குழந்தைகளுக்கும் சிறுவயதிலிருந்தே கலப்பற்ற ஆங்கிலக் கல்வி அளிக்க விரும்பினார். ஐந்து வயதுப் பாலகனாக இருந்தபோதே அவர் ஸ்ரீ அரவிந்தரை டார்ஜிலிங்கிலுள்ள செயிண்ட் பால் என்னும் ஐரோப்பியக் கல்லூரிக்கு அனுப்பினார். அங்கே ஸ்ரீ அரவிந்தர் இரண்டு ஆண்டுகள் கல்வி பயின்றார். பிறகு, தாய் தந்தையர் அவரையும் அவருடைய இரண்டு சகோதரர்களையும் படிப்புக்காக இங்கிலாந்து அழைத்துச் சென்றார்கள். அங்கே மான்செஸ்டர் நகரில், டிராயட் என்னும் பாதிரியாரின் குடும்பத்தில் குழந்தைகளை விட்டுவிட்டு, அவர்கள் கலப்பற்ற மேல்நாட்டுக் கல்வியையே பெற ஏற்பாடுகள் செய்து தாய்நாடு திரும்பினார்.

ஸ்ரீ அரவிந்தர் மான்செஸ்டர் நகரிலுள்ள இலக்கணப் பள்ளிக்கூடத்தில் ஐந்து ஆண்டுகள் கல்வி பயின்றார். 1885-ஆம் ஆண்டில் லண்டன் நகரில் செயிண்ட்பால் கல்லூரியில் சேர்ந்து படித்தார். இந்தக் கல்லூரியின் உபாத்தியாயர்கள் அவருடைய சரச குணங்களையும், புத்திக்கூர்மையையும் கண்டு பெரிதும் மகிழ்ந்தார்கள். 1890-இல், தம் 18-ஆம் வயதில், செயிண்ட்பால் கல்லூரியினின்று விலகி, நாற்பது பவுன் பெறுமான மாணவர் வேதனத்துடன் கேம்பிரிட்ஜில் கிங்ஸ் கலாசாலையில் சேர்ந்தார். அதே ஆண்டில் இந்தியன் சிவில் சர்விஸ் போட்டிப் பரீட்சையில் கலந்துகொண்டு அதில் வெற்றியும் அடைந்தார். சிவில் சர்விஸ் பரிசோதனைக் காலம் தொடங்கியது. 1892-இல் கேம்ரிட்ஜ் சர்வ கலாசாலையின் டிரைபோஹானர்ஸ் பரீட்சையில் முதல் வகுப்பில் தேறினார். அதே வருஷத்தில் அவருடைய சிவில் சர்விஸ் பரிசோதனைக் காலம் முடிவுற்றது. ஆனால், அவர் குதிரைச் சவாரிப் பரீட்சையில் வேண்டுமென்றே கலந்துகொள்ளாமல் போகவே, சிவில் சர்விஸ் உத்தியோகத்துக்கு அவர் பொறுக்கி எடுக்கப்படவில்லை.

இவ்விதம் ஸ்ரீ அரவிந்தர் இங்கிலாந்தில் இருபது வருஷகாலம் கல்வி பயின்றார். அதுசமயம் அவருக்கு ஐரோப்பிய புராதன, மத்தியகால, இக்காலக் கலைகளில் ஒரு விரிவான பயிற்சி ஏற்பட்டது. சிறு பிராயத்திலேயே அவர் கதே, தாந்தே என்னும் மகா கவிகளை மூலமொழியிலேயே ஓதுவதற்குப் போதுமான அளவு ஜர்மானிய இத்தாலிய மொழிகளைக் கற்றார். கிரேக்க, லத்தீன்மொழி

களிலும் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. தம் 18-ஆம் வயதிலேயே அவர் ஆங்கிலத்தில் கவிதைகள் இயற்றத் தொடங்கினர். அவர் கவிதைகளில் கானம், கற்பனை, படிகம் போன்ற தெளிவு, அமைப்பழகு ஆகிய யாவும் பொலிந்தன. 18 அல்லது 19 வயது வரையில் அவருக்கு இந்திய மொழி எதுவும் தெரியாதிருந்தது. அதன் பிறகே சிறிதளவு வங்காளி மொழி கற்ருர்.

ஐரோப்பிய இலக்கியங்களில் அவர் பெற்ற பாண்டித்தியம், மனத்தையும் உள்ளத்தையும் விசாலப்படுத்தி உண்மையை ஆராய்வதற்குத் தேவையான ஊக அறிவையும் நிறைவையும் நிதானத்தையும் அவருக்கு அளித்தது. மேல்நாட்டுக் கல்வி கேள்விகளில் கரைகண்ட அவர், மேல்நாட்டு நாகரிகத்தின் உண்மையான அம்சங்களையும் அடிப்படையான தத்துவங்களையும் நன்கு அறிந்தார். இங்கிலாந்தில், நடையுடைபாவனைகளில் ஆங்கிலேயரைப் போலவே வாழ்ந்த போதிலும், மேல்நாட்டுப் புறவாழ்க்கையின் ஆடம்பரமும் மினுமினுப்பும் அவரைக் கவரவில்லை. நம் நாட்டுப் புராதன ஞானமும் ஆத்மசக்தியும் அவர் உள்ளத்தில் வேர் ஊன்றியிருந்தன. அந்தக் காலத்திலேயே வேதம் உபநிடதம் போன்ற நம் பழைய நூல்களை ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்திருந்தார். தாய்நாட்டின் விடுதலைக்காகத் தாம் செய்யவேண்டிய பணியொன்று உள்ளது என உணர்ந்திருந்தார். இந்திய தேசிய இயக்கத்தைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

படித்து முடிந்ததும், 1893-ஆம் ஆண்டில் இந்தியாவுக்குப் பிரயாணமானர். பரோடா மன்னரின் சர்விஸில் 13 ஆண்டுகள் வேலை பார்த்தார். சம்ஸ்தான கலாசாலையில் சிறிது காலம் ஆங்கிலப் பேராசிரியராக விளங்கினர். இக்காலத்தில் அவர் தாய்நாட்டின் பணிக்காகத் தம்மைப் பயிற்சி செய்துகொண்டார். வங்காளம், சம்ஸ்கிருதம் போன்ற நாட்டு மொழிகளைக் கற்ருர். தொன்மையான இலக்கியங்களையும் சாஸ்திரங்களையும் படித்தார். மேல்நாட்டு நவீன இலக்கியங்களையும் சாஸ்திரங்களையும் ஆராய்ந்தார். அவரிடம் மேல்நாட்டு அறிவும் கீழ்நாட்டு அறிவும் கலந்து சம்பூரணம் அடைந்தன. கவியுள்ளம் படைத்த அவர் 'காதலும் சாதலும்', 'பாஜீ பிரபு', 'ரிஷி' போன்ற அருமையான காவியங்கள் இயற்றினர். சாதுக்களைத் தேடிச்சென்று யோக ரகசியங்களை அறிந்து அப்பியாசம் செய்தார். 1901-ஆம் ஆண்டில் மிருணுலினி என்பவரை மணந்தார். அவ்வம்மையார் ஸ்ரீ அரவிந்தரின் தியாகங்களையும் போக்குகளையும் விரும்பவில்லை. ஸ்ரீ அரவிந்தர் தம்முடன் எளிய வாழ்க்கை வாழ்ந்து நாட்டுப்பணி செய்ய அழைத்தும் அவர் இசையவில்லை.

இங்ஙனமாகத் தம்மைப் பரிபக்குவம் செய்துகொண்டு வருகையில் சுதேசி இயக்கம் மும்முரமாக நடந்தது. 1905-ஆம் வரு

ஷம் வங்காளம் துண்டிக்கப்பட்டது. மக்கள் கொந்தளிப்படைந் தனர். ஸ்ரீ அரவிந்தர் தாய்நாட்டின் அழைப்பை உணர்ந்து, 1906-இல் தம் வேலையை ராஜீநாமாச் செய்துவிட்டுக் கல்கத்தா சென்றார். தேசிய இயக்கத்தில் மும்முரமாகக் கலந்துகொண்டார். 'வந்தே மாதரம்' என்ற பத்திரிகையைத் திறம்பட நடத்தினார். அவருடைய வாக்கும் எழுத்தும் மக்களை எழுச்சிபெறச் செய்தன. 1908-இல் அலிப்பூர் சதி வழக்கில் அவர் கைது செய்யப்பட்டார்.

ஸ்ரீ அரவிந்தர் சிறையில் இருந்தபோது கண்ணனை நேருக்கு நேராகக் கண்டார். 1909-இல் விடுதலையடைந்தார். அதன் பின், தாம் தலைமை வகித்துத் தேசிய விடுதலை இயக்கத்தை நடத்துவது ஆண்டவன் சித்தம் இல்லை என்று உணர்ந்தார். 1910-ஆம் ஆண்டு வங்காளத்தை விட்டுத் தென்னாடு சென்று புதுவையில் தீவிரமாக யோகம் செய்யத் தொடங்கினார். அவரைச் சுற்றி யோகாசிரமம் ஒன்று சிறுகச் சிறுக வளர்ந்தது. யோகத்தில் பூரண நிறைவு எய்திய அவர், மனிதன் கடவுள் உணர்வுடன் இவ்வுலகில் வாழ்ந்து தெய்விக வாழ்வு வாழ்வதே இறுதியான லட்சியம் எனப் போதித்தார்.

நாற்பது வருஷம் யோகவாழ்வு வாழ்ந்து சித்தியடைந்த ஸ்ரீ அரவிந்த மகரிஷி 1950-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மகா சமாதி அடைந்தார்.

பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி ஓடி வந்துவிட்டான் ஒரு பைத்தியக்காரன். அவனைப் பார்த்து ஒருவன் பயந்து ஓட ஆரம்பித்தான். பைத்தியக்காரன் அவனை விடாமல் துரத்தினான். ஓடினவன் களைப்புத் தாங்காமல் நின்றதும் பைத்தியக்காரன் அவனைப் பிடித்துத் தட்டிவிட்டு, "ஓ, உன்னை நான் தொட்டுவிட்டேன். நீ இப்போது என்னைப் பிடிக்க வேண்டும்'' என்றான்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(L) 65. லோகநாதன், P. தாரமங்கலம். 66. லக்ஷ்மி, C., புது டில்லி. 67. லக்ஷ்மி மகாதேவன், N., காரைக்குடி. 68. லக்ஷ்மிகாந்தன், S., பள்ளப்பட்டி. 69. லக்ஷ்மணன், K., சென்னை - 4. 70. லக்ஷ்மணன், P., சென்னை - 4.

(M) 85. மாணிக்கம், A., ஹாட்டன். 86. மாணிக்கம், P., குன்னூர். 87. மாணிக்கம், A., கும்பகோணம். 88. மீனாக்ஷி, R., சென்னை - 4. 89. மார்க்கண்டன், H. N., சென்னை - 1. 90. மகம் மது மக்கீன், P. N. M., கொழும்பு. 91. முகுந்தன், மதனகோபால், E.S., ஈரோடு. 92. மங்களசாமி, ராஜேந்திரன், சரோஜினி தேவி, தியாகராஜன், S., கொடிக்காமம். 93. முகம்மதலி, S.M.S., இளையாங்குடி. 94. முகம்மது மொகைதீன் K., அறந்தாங்கி. 95. மஹேசன், A. P., காரமடை. 96. மகாலிங்கம், M. S., கும்பகோணம். 97. மூர்த்தி, K. K., கொல்லம். 98. மூர்த்தி, K. V. K., புது டில்லி. 99. முத்துநாராயணன், R., திருச்சி. 100. மோகன், முரளி, M., சென்னை -8.

(N) 78. நந்தகுமார், M. S., ஸ்ரீரங்கம். 79. நாராயணன், M. S., ரங்கநாதபுரம். 80. நாராயணன், S. L., ரங்கூன். 81. நடராஜன், S. C., பெங்களூர். 82. நாராயணமூர்த்தி, S., சென்னை -5. 83. நாராயணன், V., உடுமலைப் பேட்டை. 84. நாராயண ராவ், கோதாவரிபாய், சேதுபாய், T.K., சென்னை-15. 85. நாராயணன், D., வில்லிவாக்கம். 86. நாராயணன், V., சென்னை-17. 87. நாராயணன், A., காரைக்குடி. 88. நடராஜன், N., பெங்களூர் கண்டோன்மென்ட். 89. நடராஜன், K., நெல்லித் தோப்பு. 90. நடராஜன், M., கோயம்புத்தூர். 91. நந்தகோபாலன், R. S., திண்டிவனம். 92. நந்தகுமார், B. N., திருச்சிராப்பள்ளி. 93 நாச்சிமுத்து, A., திருச்செங்கோடு. 94. நூர்தீன், M. S., யாழ்ப்பாணம்-23. 95. நூர் முகமத், M. P., மேலூர். 96. நகேஸ், T R., பெங்களூர் சிடி. 97. நாகரத்தினம், R., கந்தர்வ கோட்டை. 99. நாராயணசாமி, P., விஷ்ணுபுரம். 100. நம்பி ராஜன், R., முருகன்குறிச்சி. 101. நாமகிரி, R., ஸ்ரீவைகுண்டம். 102. நாவலன், N., திருப்பத்தூர். 103. நாகமணி, A., வெள்ளக் கோயில். 104. நாகப்பன், S., பண்ருட்டி. 105 நிர்க்குணன், R., கொழும்பு-9. 106 நரசிம்மன், P. K., சோலிங்கபுரம். 107. நரசிம்மன், T., திருவள்ளூர். 108. நீலகண்டன், N., உடுமலைப்பேட்டை. 109. நாகராஜன், R., சத்தியமங்கலம். 110. நடராஜன், சாமி, சுப்பிரமணியன், N, அயனாபுரம். 111. நாதன், N. S V., சென்னை-4. 112. நாராயணன், P S., சென்னை - 18. 113. நாகராஜன், குருமூர்த்தி, சென்னை-4. 114. நாகராஜன், C.S., சென்னை-17. 115. நூர்தீன், M S., யாழ்ப்பாணம். 116. நஸுருதீன், M., கொழும்பு 117. நாதன், S.K., முள்ளக்கல். 118. நாகப்பன், J., ஹாட்டன். 119 நாராயணன், S., சென்னை-5. 120. நீலாயதாக்ஷி, சாமிநாதன், N., நெல்லிக்குப்பம். 121. நமச்சிவாயம், ஆண்டிப்பட்டி. 122. நாகராஜன், B. S., புனா-2. 123. நடராஜன், சரஸ்வதி, S., சென்னை-14. 124. நாராயணசாமி, K., பெங்களூர். 125.

நடேசன், C. R., கோயம்புத்தூர். 126. நமச்சிவாயம், V., காரைக் குடி. 127. நாராயணன், S. N., மதுரை. 128. நரசிம்மமூர்த்தி, V., பெங்களூர். 129. நந்தகோபால், N., சென்னை-1. 130. நரசிம்மன், R. L., எமப்பூர். 131. நித்தியா, A., கோனேரிராஜபுரம். 132. நைனார்முகம்மத், H., போடிநாயக் கனூர். 133. நடராஜன், R., நாகர் கோயில். 134. நித்தியானந்தம், R., கரம்பன் கிழக்கு. 135. நல்ல பெருமாள், N., நாகர்கோவில். 136. நடராஜன், K. M., மேட்டூர் அணை.

(P) 100. பத்மினி, D., சென்னை-4. 101. பட்டாபிராமன், S., திருச்சிராப்பள்ளி. 102. பிச்சை, K. R., கும்பகோணம். 103. பட்டிலிங்கம், S., கோயம்புத்தூர். 104. பொன்னம்மாள், கடத்தூர். 105. பொன்னுசாமி, S., சென்னை - 21. 106. பரிமளா, லலிதா, ரகுபதி, R., ஸ்ரீநிவாசபுரம். 107. பட்டாபி ராமன், திருக்கழுக்குன்றம். 108. பார்வதி, சீநிவாசன், K., லக்னௌ. 109. பர்வதவர்த்தினி, புதுச்சேரி. 110. பெரியக்காண்டி, P., மேட்டுப் பாளையம். 111. பிளடிஸ், ரங்க சாமி, R., கோயம்புத்தூர். 112. பாக்யநாதன், S., சுண்டுக்குழி. 113 பரந்தாமன், R., குடியாத்தம். 114. பெரியசாமி, S., நாமக்கல். 115. புஷ்பராணி, S., வேலன், சிலோன். 116. பெருமாள், R., மதுரை. 117. பிரகாசம், A. R. G., அரசங்குப்பம். 118. பழனியப்பன், P., எட்டையன்தோட்டம். 119. பார்த்தசாரதி, M. N., ராபர்ட்சன் பேட்டை. 120. பத்மநாபன், K., சென்னை - 4. 121. பத்மாவதி, P., குமாரபாளையம். 122. பழனியப் பன், K., (விலாசம் எழுதவில்லை.) 123. பதமினி, R., புது டில்லி. 124. பிரேமாவதி, P. M, பைபநாதம். 126. பிரேமாவதி, N., குளித்தலை. 127. பிரேமகுமாரி, A. S. C. S., (விலாசம் எழுதவில்லை.) 128. பிரேமகுமாரி, S., ராமகுமார், சென்னை - 17. 129. பரமேசுவரன், சரோஜா, P. S., கல்கத்தா. 130. பரமேசுவரி, P. S., சென்னை - 17. 131. பழனிசாமி, M., க. பரமாதி. 132. பழனிசாமி, G. R., கணபதி, இலங்கை. 133. பழனியாண்டிப் பிள்ளை, N., நாகர்கோவில். 134. பழனிசாமி நாடார், S., பட்டி. 135. பழனி, R., பணையாபுரம். 136. பார்த்தசாரதி, M., முத்தரசநல்லூர். 137. பத்மநாபன், R. A., புதுடில்லி. 138. பத்மநாபன், V., கொழும்பு. 139. பழனியப்பன், K., மோகனூர். 140. பிரபு, R., சென்னை 4. 141. பஞ்சாபகேசன், K., வில்லிவாக்கம். 142. பஞ்சாபகேசன், L. R., நாக புரி. 143. பார்வதி, M. S., சென்னை-11. 144. பேதுரு, T.T., மால்டா. 145. பழனியப்பன்,

இங்கே கத்தரியுங்கள்.

நக
ல்.
க்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..................

(தேதி, மாதம், வருஷம்)

பிப்ரவரி '51 கூபன் செ

கொச்சிக்கடை. 146. பத்மநாபன், V. K., சென்னை-17. 147. பிரேம் குமார், சியாம் சுந்தர், S. R., சென்னை-3. 148. பிள்ளை, M. A., (விலாசம் எழுதவில்லை.) 149. பிச்சை, G., புதுக்கோட்டை. 150. பரமேசுவரன், S., கோயம்புத்தூர். 151. பிரபாவதி, A. V., கல்கத்தா-29. 152. பார்த்தசாரதி, V., சென்னை-5. 153. பார்த்தசாரதி, J., சென்னை-17. 154. பொன்னுரங்கம், R., ஓசூர். 155. புவனகிரி, E., கோப்பாய். 156. பிரபாகரன், K., சென்னை-14. 157. பரமசிவம், R., பாதமுல்லை, இலங்கை. 158. பரிமளரங்கன், O. R., மதுராந்தகம். 159. பத்மநாபன், S., சென்னை-4. 160. பஞ்சநதம், உடுமலைப்பேட்டை. 161. பரிமேலழகன், M. G., ராணிப்பேட்டை. 162. புனிதவதி, ராஜேசுவரி, சந்திரசேகரன், T., மதுரை. 163. பிரகாஷ், A. S., சென்னை-18. 164. பார்த்தசாரதி, S., அம்மாப்பேட்டை. 165. பெருமாள், குருசாமி, S., திருமங்கலம். 166. பழனியாண்டி, P.M., மேட்டுப்பாளையம். 167. பார்வதி, P. R., பெங்களூர். 168. பட்டம்மாள், கோபால, வேலாம்பாள், P., புனா 2. 169. பொன்னுசாமி, K., கீழவெளியூர். 170. பார்த்தசாரதி, ஜகந்நாதன், ஆராவமுதன், R., கும்பகோணம். 171. பத்மாவதி. R., அம்மன்குடி. 172. புருஷோத்தமன் K., முள்ளக்கல். 173. பழனியப்பன், கோயம்புத்தூர். 174. பழனி, A., நாகப்பட்டினம். 175. பெருமாள், பாக்கியலக்ஷ்மி, ராயபுரம், சென்னை. 176. புருஷோத்தமன், C. S., கோலார் - தங்கவயல். 177. பழனிசாமி, K. R., கொங்கணபுரம். 178. புருஷோத்தமன், தனலக்ஷ்மி, சிங்காரவேலு, பரந்தாமன், R., மலாக்கா. 179. பழனியப்பன், ராமசாமி, எட்டையந்தோட்டம். 180. பசுபதம், A. L., (விலாசம் எழுதவில்லை). 181. பிள்ளையார், S., வேலாயுதபுரம். 182. பிரேமா, G., திருவாரூர். 183. பிரேமகுமாரன் T. A., திருப்பத்தூர். 184. பத்மநாபன், S., சென்னை-4. 185. பழனிசாமி, A., (விலாசம் எழுதவில்லை). 186. பாண்டியராஜன், R., மதுரை. 187. பிரகாசம், சதானந்தம், சாந்தா, நாகராஜன், R., வாணியம்பாடி. 188. பார்த்தசாரதி, G., திருச்சிராப்பள்ளி. 189. பார்த்தசாரதி, R., சென்னை-21. 190. பத்மநாபன், P. V., சேலம். 191. பொன்னுதுரை, சிவலிங்கம், துரைராஜா, தங்கத்துரை, R., மட்டக்களப்பு. 192. பரமசிவம், சுப்பிரமணியம், ஏகாம்பரம், கோகிலாம்பாள், T. V., திருச்செங்கோடு. 193. பாண்டியன், S., கொழும்பு. 194. பரிதா, A. K., திருநெல்வேலி.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★★★★★★

ஜக்கு துப்பறிகிறான்

'ஆர்வி'

ஜக்கு தன்னைச் சமாளித்துக் கொண்டான். "அடேய், நந்து! இந்தப் பயல்களை நான் கவனிச்சுக்கறேன். நீ அந்தக் கதவைப் போய்த் திற!" என்றான்.

அவன் பேச்சுக் குரலைக் கேட்ட பிறகுதான் சோனிக்கு அந்த முகமூடிப் பையன் யார் என்று தெரிந்தது. "ஜக்கூ!" என்று குரல் நடுங்கக் கூவினான்.

"ஆமாம்; ஜக்குதான் நான். உல்ப் சொன்னமாதிரி கோழையல்ல!" என்று சொல்லிக் கொண்டே தன் முகமூடியைச் சுழற்றி எடுத்தான். பிறகு கையில் இருந்த துப்பாக்கியை நீட்டியபடியே, "அடே புலிகளா! இது வெற்றுத் துப்பாக்கி தான். பயப்படாதீர்கள்! வெடித்தால் வெறும் புகையும் சத்தமுந்தான் மிச்சம்!" என்று குதிரையை இழுத்துவிட்டான். படீரென்று தூக்கி வாரிப் போடுவதுபோலத் துப்பாக்கி வெடித்தது. அறை முழுவதும் புகை சூழ்ந்துகொண்டது. சீனவெடி வெடித்த நாற்றம் பரவியது.

இந்தச் சத்தத்தினால் ஏற்கனவே வேதனை கொண்ட உல்ப், சோனி கோஷ்டியாரின் முகங்களில் இன்னும் சங்கடம் உண்டாயிற்று ஜக்குவின் தீரப் பேச்சோ அவர்களுக்குரோஷத்தையும் வெட்கத்தையும் மூட்டியது. கீழே மோட்டாரில் வந்த நாலைந்து பேர்கள் எப்படியும் இன்னும் சில விநாடிகளில் மேலே வந்துவிடுவார்கள். அதற்குள் என்ன செய்வது என்று புரியாமல் அவர்கள் கையைப் பிசைந்துகொண்டு விழித்தார்கள்.

ஜக்கு வெகு அலக்ஷியமாகக் கடகடவென்று சிரித்தான். "அதோ! உங்களைப் பிடித்துக் கொள்ளச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் சீட்டாட்டக் கோஷ்டி வந்துவிட்டது. உம்... உடனே நான் சொல்வது போலச் செய்யுங்கள். நடந்தது போகட்டும். பையன்களுக்குப் பையன்கள் விட்டுக் கொடுக்கக் கூடாது. எல்லாரும் நந்து ஒளிந்துகொண்ட அறைக்குச் செல்லுங்கள். மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான்.

சோனிமட்டும் தயங்கிய குரலில், "அது... அது.." என்றான்.

அவன் குறிப்பிட்டது அந்தக் கோரமான மனித உடலைத் தான். ஆனால் ஜக்குவோ, "அந்

ஏதோ ஒரு சொப்பன உலகில் குதிப்ப
தைப் போல இருந்தது அவர்களுக்கு.

தப் பஞ்சு அடைத்த பொம்மை எங்கே கிடந்தால் என்ன? நீங்கள் போங்கள்!'' என்முன்.

அதைப் பார்த்துவிட்டுத்தான் நந்து, 'ஓஹோ' என்று சொன்

ருக உற்றுப் பார்த்தால்தான் இந்த உண்மை தெரியவரும். உள்ளே பஞ்சு வைத்துத் திணித்து மேலே வர்ணச் சாயமும் பூசியிருந்தது. இதைப் பார்த்து விட்டுத்தான் ஜக்கு யாரோ கொலை செய்து விட்டார்கள் என்று முதலில் பயந்து போனன்.

சங்கர்...

'ஆனல் அந்த உடல் அங்கே ஏன் கிடக்க வேண்டும்? அதற்கு என்ன அவசியம்?' என்பதெல்லாம் நந்துவுக்குப் புரியவேயில்லை. அவன் கதவைத் திறந்தான். ஒவ்வொருவராக உள்ளே நுழைந்தார்கள். இதற்குள் மாடிப்படிகளில் யார் யாரோ ஏறிவரும் சந்தடி கேட்டது.

''ஜல்தி'' என்று கூவினன் ஜக்கு.

கதவு படபட வென்று இடிபட்டது. ஒரே பாய்ச்சலில் ஜக்கு கதவைத் திறந்து விட்டு அடுத்த கணம் அந்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

நந்து மெதுவாக, ''ஏன் கதவைத் திறந்து விட்டாய்? நீ தனியாக

னன். பார்த்தால் நிஜ மனித உடலைப் போல இருந்த அந்த உருவம் வெறும் காகிதமும் வைக்கோலும் சேர்த்துச் செய்த பொம்மை! அதை நன்

வந்துவிடுவதற்கு என்ன?'' என்முன்.

''எல்லாம் காரியமாகத்தான் திறந்தேன். இனி ஒரு கணமும் தாமதிக்காதீர்கள். நந்து, மெது

வாக அந்தத் தரையில் கோடு போட்டிருக்கும் இடத்தில் காலை வை!' என்ருன்.

நந்துவுக்கு, அந்த அறையில் அதே இடத்தில்தான் ஜக்கு ஜமக்காளத்துக்குள் பதுங்கிக் கொண்டான் என்பது ஞாபகத்துக்கு வந்தது. அவன் சிறிதும் தயங்காமல் காலை வைத்தான். கர்-கர் என்று ஏதோ சத்தம் கேட்டது.

"பேசாமல் இரு; சற்றைக்கெல்லாம் வழி விலகும்" என்ருன் ஜக்கு.

எல்லாரும் ஜக்கு சொல்வதை ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். உல்ப் கூட ஜக்குவைக் கண்டு பிரமித்தான். ஆனல் சோனிதான் வஞ்சனைக்காரன் ஆயிற்றே! எதிரிக்கு மதிப்புக் கிடைத்தால் அவன் மண்டை வெடித்துப் போகாமல் இருக்குமா?

"அடே உல்ப்! இதில் ஏதாவது சூது இருந்தால் என்னடா செய்வது? பெரிய ஹீரோ மாதிரி பேசருன்னு அப்படியே மலைச்சுப் போறியே!" என்ருன் காதோடு காதாக.

ஜக்குவின் கூர்மையான காதுகளைவிட அவனுடைய கூர்மையான கண்கள் அவன் உதட்டசைப்பைப் புரிந்து கொண்டன. 'போகிருன், அசட்டுப் பயல்! ஆபத்துச் சமயம் தெரியாமல் அவன்தான் பேசுகிருன் என்ருல் நாமும் இவர்களைக் காட்டிக் கொடுப்பதா?' என்றுதான் ஜக்கு எண்ணினன்.

"என்னப்பா யோசனை? நந்து, ஜமக்காளம் போட்டு மூடியிருந்ததே அந்த இடந்தான் அது. உனக்குப் பக்கத்தில் வந்து ஒளிந்துகொண்டவன் நான்தான். ஆனல் ஜமக்காளத்தை விலக்கியபோது நான் எங்கே இருநதேன், தெரியுமா? அதோ பார்! தரை மாதிரி இருந்த இடத்தில் ஒரு கதவு இபபோது தெரிகிறதே, அங்கேதான்" என்று கீழே தரையைச் சுட்டிக் காட்டினன்.

அந்தச் சமயத்தில் வேறு ஒரு பயம் அவர்களைப் பற்றிக் கொண்டது. உல்பும் சோனியும் கையில் வைத்திருந்த பட்டாக் கத்திகளை அங்கே போட்டுவிட்டு வந்திருப்பார்கள். உள்ளே நுழைந்தவர்கள் அதை எடுத்து விளையாட்டுச் சண்டைபோல வீசின சத்தம் அவர்கள் காதில் விழுந்தது.

அவர்களில் ஒருவன், "இன்னிக்குப் அந்தப் பயல்கள் வந்திருக்கானுக போல் இருக்கே! இன்னிக்கு விட்டோமோ, போச்சு!" என்ருன்.

அடுத்தபடி இன்னொருவன், "அந்தப் பயல்களுடைய தலைவன் பெயர் என்ன? கொக்குவா, மக்குவா?" என்று கேலியாக விசாரித்தான்.

"இல்லை; ஜக்கு!" என்று திருத்திச் சொன்னன் மற்றவன்.

"மூளைச்சு முளையாகல்லே. தலைவனும், லீடராம்! பள்ளிக்கூடத்துப் பசங்களா லட்சணமாவா இருக்கானுக? சுத்தச் சோம்பேறித் தடிப் பயல்கள்!" என்ருன் இன்னொருவன்.

எல்லாம் பெரியவர்களுடைய குரலாகத்தான் கேட்டது.

இந்தச் சமயத்தில் ஜக்கு சோனியின் முகத்தையும் உல்பின் முகத்தையும் கூர்ந்து கவனித்தான். அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம் தெரியுமா? "என் பெயர் இவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்பதுதான்.

ஆனால் சோனியோ உல்போ பதில் பேசாமல் வேறு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

"என்னடா, உட்கார்ந்துவிட்டீர்கள்? அந்தப் பசங்கள் இங்கேதான் இருக்கானுகளாம். தோட்டக்காரனைக் கேட்டேன். முதல்லே அவங்களைக் கவனிச்சுப்புட்டுத்தான் மறு வேலை!" என்றான் ஒருவன் வெளியில்.

"ஆளுக்கு ஒரு ரூமாகப் பார்ப்போமே" என்றான் மற்றவன்.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட ஜக்கு, "உம், உம், கீழே தெரியும் படிக்கட்டு வழியாகத் தயங்காமல் இறங்குங்கள்!" என்று கட்டளையிட்டான்.

முதலில் நந்து இறங்கினான். மற்றவர்களும் இறங்கினார்கள். கடைசியாக ஜக்குவும் இறங்கிவிட்டான். கதவு பழையபடி தரையோடு தரையாகப் பதிந்துகொண்டுவிட்டது. படிக்கட்டுகளில் இறங்குவது சிறிது சிரமமாக இருந்தது.

ஒரே இருட்டுத்தான். இருந்தாலும் வழி தெரிந்தது. காற்று ஜிலு ஜிலு என்று வீசியது. அவர்களுக்கு ஏதோ ஒரு சொப்பன உலகத்தில் போய்த் தாங்கள் குதிப்பதுபோல இருந்தது.

தரை மட்டத்துக்கு அவர்கள் வந்ததும் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். மேஜை, நாற்காலி, பீரோ, கட்டில் முதலியவை அங்கே இருந்தன. ஒரு மின்சார விளக்கு எரிந்து கொண்டும் இருந்தது. டெலிபோன் இருந்தது. 'இந்தப் பங்களாவில் புழக்கமான இடமே இல்லையே, இந்த இடம் எது? இது இந்தப் பங்களாவைச் சேர்ந்த இடமா? அல்லது வேறு பங்களாவைச் சேர்ந்த இடா? இது பாழடைந்த பங்களா என்று பிரசித்தமாயிற்றே' என்று நந்து எண்ணினான்.

அதற்குள் டெலிபோன் மணி கிணுகிணுத்தது.

ஜக்கு டக்கென்று எல்லாரையும் முந்திக் கொண்டு ரிஸீவரைக் கையில் எடுத்தக் கொண்டான்.

(தொடரும்)

சந்திரகாந்தன்

விக்கிரமன்

கதைகளிலே பொதுவாக இரண்டு விதம் உண்டு; நம்ப முடிகிற கதை ஒன்று. நம்ப முடியாத கதை மற்றொன்று. எப்படி இருந்தாலும் இப்போது நான் சொல்லப் போகிற கதை இருக்கிறதே, அடடா, அருமையான கதை; அற்புதம் நிறைந்த கதை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்படியெல்லாம் நடந்திருக்குமா, இது நம்பக் கூடியதா என்று நாம் ஏன் கவலைப்படவேண்டும்? கதை ஜம்மென்று இருக்கவேண்டும்; அவ்வளவுதானே!

முதலில் ஒரு விஷயம்: இது எந்த நாட்டில் நடந்தது என்று சரியாக ஞாபகமில்லை. ஆனால் நம் தமிழ்நாடு அளவு பெரிய தீவு அது. அந்தத் தீவில் வெண் மேகங்கள் வந்து தங்கும் பெரிய மலை ஒன்று இருந்தது. அதிலிருந்து பெருகிவரும் அருவி ஒன்று சலசல வென்று அதன் அடிவாரத்தில் ஓடிக்கொண்டிருந்தது. கரையின் இருமருங்கிலும் சோலைகள். குயில்களும் கிளிகளும் இன்னிசையுடன் கூவிக்கொண்டே இருக்கும். மயில்களும் மான்களும் அங்கு மிங்குமாகத் திரிந்துகொண்டிருக்கும். சோலைகளில் காயும் கனியும் பூவும் பிஞ்சுமாகக் குலுங்கும். இத்தனைக்கும் அந்தப் பிரதேசம் மனித சஞ்சாரமே இல்லாத இடம்.

அங்கேதான் ஒரு நாள் நடுப்பகல் நேரத்தில் சோர்ந்து முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தான் சந்திரகாந்தன்.

சந்திரகாந்தன் அழகிய இளைஞன். கட்டிளங் காளை. போர் வீரனைப்போல அவன் இடையில் வாளும் மார்பில் கவசமும் கையில் கேடயமும் அணிந்திருந்தான். ஆனால் ஏனோ அவன் கண்களில் நீர் தேங்கி நின்றது.

திடீரென்று சந்திரகாந்தன் தோள் மீது யாரோ கையை வைத்தார்கள். அவன் திடுக்கிட்டான். அதற்குள் எதிரே தோன்றிய அந்த இளைஞன், "சந்திரகாந்தா, என்ன பிரமாத கவலை! அடே; இதென்ன கண்களில் நீர்?" என்று கேட்டான்.

சந்திரகாந்தன் தலை நிமிர்ந்தான். அவனைப் போன்ற ஒரு வீரன் பள்ளிச் சிறுவனைப்போல் கண்ணீர் வடிப்பதா? அவன் தன் கண்களை மெதுவாகத் துடைத்துக்கொண்டு, "நான் ஒன்றும் கவலைப்படவில்லையே! நான் செய்யத் தீர்மானித்த தீரச் செயலைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறேன்" என்றான்.

"ஓஹோ! அதென்ன அப்பா தீரச் செயல்?" என்று கேட்டபடியே அந்த இளைஞன் அவன் அருகில் உட்கார்ந்துகொண்டு, "என்னிடம்

தான் அதைச் சொல்லேன். நானும் எவ்வளவோ பேர்களுக்கு உதவி செய்திருக்கிறேன். நீகூட என்னைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பாயே. என்னைத்தான் மகேந்திரஜித் என்று அழைப்பார்கள்" என்றான் இளைஞன்.

சந்திரகாந்தனுக்கு அவன் வார்த்தைகள் நம்பிக்கை அளித்தன. அவனுடைய விசித்திரமான கிரீடமும் இடையில் செருகியிருந்த ஸ்வர்ணப்பிடியிட்ட சுருள் கத்தியும் தோல் பிரம்பும் அவன் வனப்பு மிகுந்த தேகக்கட்டும் ஆளைக் கவர்ந்தன.

"சரி; உன்னிடம் எனக்குச் சிறிதும் அவநம்பிக்கையில்லை. உன்னிடம் நட்புக் கொள்ளவே என் மனம் துடிக்கிறது. நான் புறப்பட்ட காரியம் ரொம்ப ஆபத்தானது. அது பெரிய கதை. இருந்தாலும் கேள்" என்று தன்னுடைய வரலாற்றைத் தெரிவித்தான். அவனுடைய வரலாறு இதுதான்:

அந்தத் தீவின் அரசன் விஷாலன் மகா கொடியவன். அந்தத் தீவின் மக்களோ அவனைப் போலவே மகா கொடியவர்கள். சந்திரகாந்தனும் அவனுடைய தாயும் அவன் பிறந்த சமயத்தில் சொந்த நாட்டிலிருந்து தப்பி ஓடி வரும்படி ஆகிவிட்டதால் அவர்களுக்கு உற்றதுணை அங்கே யாரும் இல்லை. ஒரே ஒரு கிழக் குடியானவன் மட்டுமே அவர்களை ஆதரித்து வந்தான்.

சந்திரகாந்தன் வளர்ந்து தினம் தினம் வாள் பயிற்சியிலும் வில் வித்தையிலும் குதிரையேற்றத்திலும் தேர்ச்சி பெற்று வந்ததைக் கண்ட அந்தத் தீவு மக்கள் பெருமை கொண்டார்கள். விஷாலனுக்கும் பொறாமையும் அசூயையும் உண்டாயின. அவன் தன் இயற்கையான கொரே சிந்தையுடன் ஒரு நாள் சந்திரகாந்தனைத் தன் அரண்மனைக்கு அழைத்தான்.

"சந்திரகாந்தா!" என்று அழைத்து அரசன் குறும்புச் சிரிப்புடன், "நீ இந்தத் தீவின் பெருமைக்குப் பாத்திரமான வீர இளைஞன். இந்த நாட்டில் இருந்ததால்தான் இத்தனை வசதிகளுடன் நீ எல்லாவற்றிலும் தேர்ச்சி அடைய முடிந்தது. அதற்குப் பிரதியுபகாரமாக நீ எனக்கு ஏதாவது செய்வாய் என்று எதிர் பார்க்கிறேன். என்ன சொல்கிறாய்?" என்றான்.

"என் உயிரைக் கொடுத்தேனும் அரசர் விருப்புவதைச் செய்து முடிக்கச் சித்தமாய் இருக்கிறேன்" என்றான் சந்திரகாந்தன்.

"அப்படி! நம் இளைய ராணிக்கு அரிய பரிசு ஒன்று கொடுக்க எண்ணுகிறேன். இப்போதுதான் அதைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். அசுணம் என்ற விலங்கின் தலையை எப்படியாவது கொண்டு வரவேண்டும். இதைவிடச் சிறந்த பரிசு உலகத்தில் வேறு என்ன இருக்கிறது, சொல்!" என்றான் விஷாலன்.

"அப்படியானால் நான் அதைச் செய்ய...."

"முடியும். நான் நினைப்பதைப் போல் நீ உண்மை வீரனாக இருந்தால் உன்னால் நிச்சயம் முடியும்" என்றான் விஷாலன்.

"நாளையே புறப்படுகிறேன். ஆக்கினையிடுங்கள்" என்றான் சந்திரகாந்தன்.

ஜனங்கள் யாவரும், "ஒஹோஹோ! பையன் அசுணத்துக்கு ஆகாரம்!" என்றுகூடப் பரிகாசம் செய்தார்கள். அவன் எதையும் லட்சியம் செய்யாமல் தாயிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டு வந்துவிட்டான்.

இந்த வரலாற்றைத் தெரிந்துகொண்ட மகேந்திரஜித், "சந்திரகாந்தா, கவலைப்படாதே! உன்னுடைய நல்ல காலத்தினால்தான் என்னைச் சந்திக்க நேர்ந்தது. சரி; புறப்படு! ஆனால் முதலில் உன்னுடைய கேடயத்தை நன்றாகப் பளிச்சென்று தேய்த்துக் கொள்" என்றான்.

'கேடயம் எப்படியிருந்தால் என்ன? வாள் அல்லவா கூர்மையாக இருக்கவேண்டும்?' என்று நினைத்தான் சந்திரகாந்தன். ஆயினும் மகேந்திரன் சொல்வதைத் தட்ட விரும்பவில்லை. கண்ணாடி போல அதைப் பளபளவென்று தேய்த்துக்கொண்டான்.

"அடுத்தபடி நாம் அந்த பதுமத் தீவுக் குமரிகளைப் பார்க்கப் போக வேண்டும்!" என்றான் மகேந்திரஜித்.

"யார் அந்தக் குமரிகள்?" என்றான் சந்திரகாந்தன்.

"அவர்களிடம் விசித்திரமான மூன்று பொருள்கள் இருக்கின்றன. இதோ என் கால்களைப் பார்!"

சந்திரகாந்தன் அவன் கால்களைப் பார்த்தான். அவன் கால்கள் தரையில் சரியாகப் பதியாமல் மிதப்பவைபோல நின்றன. அவன் கால்களில் இரண்டு அழகான இறகுகள் இருந்தன. அவை ஸ்வர்ண இதழ்களைப் போல ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தன.

"இவை என்னவென்று ஆச்சரியப்படுகிறாய் அல்லவா? நீ நிற்க வேண்டியதுதான். உன்னை இந்த இறக்கைகள் அப்படியே ஜம்மென்று தூக்கிக்கொண்டு போகும். இதே மாதிரி என் சகோதரியிடமும் ஒரு ஜோடி உண்டு. எங்களைப் பிடிக்கவோ அல்லது பார்க்கவோ ஒருவராலும் முடியாது. நேற்று நீ விஷாலனுடைய ராஜ சபையில் நின்றபோது நாங்கள் அங்கேதான் இருந்தோம். ஆனால் எங்களை யாரும் கண்டு கொள்ளவில்லை. இன்று அவள்தான், 'பாவம், சந்திரகாந்தனை நாம் எப்படியாவது காப்பாற்ற வேண்டும்' என்றாள். அதனால்தான் நான் வந்திருக்கிறேன்" என்றான் மகேந்திரஜித்.

சந்திரகாந்தனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "இந்த இறக்கைகள் இருப்பதனால் உன்னைப் பிடிக்க முடியாது என்று சொல்கிறாயே, அது சரி; ஆனால் உன்னை இதோ பார்க்கிறேனே. அது பொய்யா?" என்று கேட்டான்.

உடனே மகேந்திரன் தன் இடுப்பில் செருகியிருந்த ஒரு மடிப்புத் தொப்பியைப் பிரித்துத் தலையில் அணிந்து கொண்டான். அவ்வளவுதான்; அடுத்த கணம் மகேந்திரனைக் காணவில்லை! ஆனால் இரண்டு பேர் சிரிக்கும் ஒலி மட்டும் கேட்டது.

"மகேந்திரா! உன் மாயக் குல்லாயைத் தயை செய்து எடுத்துவிட்டு என்னோடு சுய உருவில் இரு" என்றான் சந்திரகாந்தன்.

மகேந்திரன் கையில் மடிப்புக் குல்லாயுடன் மறுபடியும் எதிரே தோன்றினான். அதைக் கையில் எடுத்து விட்டால்

அவன் உருவம் பிறருக்குத் தெரியும் என்பதை உணர்ந்தான் சந்திரகாந்தன். சிரித்தபோது பெண்ணின் ஒலியும் கேட்டதால் அவன் மகேந்திரனைப் பார்த்து, "அன்பா! உன் சகோதரியை நான் பார்க்கக்கூடாதா?" என்று கேட்டான்.

"அசுணத்தைக் கொல்லும் வரையில் அவளை நீ பார்க்க முடியாது. ஆனால் அவள் உதவியினால்தான் நீ அந்த அசுணத்தையே பார்க்க முடியும். முதலில் என்னிடம் இருப்பதைப் போன்ற இந்தப் பொருள்களை அடைய வேண்டுமானால் பதுமத் தீவுக்கு நாம் புறப்பட வேண்டும்" என்றான் மகேந்திரன்.

எங்கும் சோலைகளும் மலைகளும் பட்சிகளும் பிராணிகளும் தென்பட்டன. மனிதர்களுடைய உருவமே தென்படவில்லை. ஆனால் பேச்சுகளும், பாட்டின் இன்னிசையும், சிரிப்பின் மெல்லொலியும் கேட்டன. சந்திரகாந்தன் வியப்புடன், "என்ன, தோழா! இந்தத் தீவில் ஒவ்வொருவரிடமும் உன்னிடம் இருப்பதைப் போன்ற மாயக் குல்லாய் இருக்கும் போல் இருக்கிறதே!" என்று கேட்டான்.

"அப்படி ஒன்றும் இல்லை. பதுமக் குமரிகள் நல்ல குணம் உடையவர்கள். ஆனால் ஒரு விஷயத்தில்மட்டும் மிகவும் கண்டிப்பானவர்கள். யாரும் தங்களைப் பார்க்க இசையவே மாட்டார்கள். அப்படி யார் அவர்களைப் பார்க்கிறானோ அவர்களுக்குத்தான் அந்த மூன்று பொருள்களும் கிடைக்கும். இப்போதுதான் உன் சாமர்த்தியத்தைப் பார்க்கப் போகிறேன்" என்றான்.

"ஆமாம், அந்த மூன்றாவது பொருள் என்ன? அதைச் சொல்லவில்லையே நீ."

மகேந்திரன் உடனே, "அசுணத்தைப் பார்த்திருக்கிறாயா நீ?" என்று கேட்டான்.

"இல்லை; இனிமேல்தானே பார்க்கப் போகிறேன்" என்றான் சந்திரகாந்தன்.

"நீ பார்க்க முடியாது. பார்த்தால் அப்படியே பளிங்குச் சிலையாக மாறி விடுவாய். அதற்குத்தான் ஒரு பை வேண்டும். அந்தப் பையை வைத்திருந்தால்தான் அந்த அசுணத்தின் தலையை அதில் போட்டுக் கொண்டு எடுத்து வர முடியும்" என்றான் மகேந்திரஜித்.

சந்திரகாந்தனும் மகேந்திரனும் பதுமக் குமரிகளின் சபா மண்டபத்தை அடைந்தார்கள். பார்த்தால், ஊதுவத்திகள் எரிகின்றன; புகை வருகிறது; வாசனை வீசுகிறது. மேள வாத்தியங்கள் முழங்குகின்றன. பேச்சுக் குரல்கள் கேட்கின்றன. சாமரம் தானே விசிறிக்கொள்கிறது. தங்கச் சிம்மாசனங்கள் காலியாகக் கிடக்கின்றன. யாரோ வந்து பேசுகிறார்கள் போல் தோன்றுகிறது. ஆனால் யாரையுமே கண்ணால் காண முடியவில்லை.

"அதோ அரசிளங் குமரி வந்துவிட்டாள். அவளை வணங்கு!" என்றான் மகேந்திரன்.

சந்திரகாந்தன் வெறும் வெளியைப் பார்த்துத் தலை வணங்கினான். சிம்மாசனம் மட்டுந்தான் தெரிந்ததே தவிர, அந்த அரசிளங் குமரியை அவனால் பார்க்க முடியவில்லை.

திடீரென்று சந்திரகாந்தனுக்கு ஒரு யோசனை தோன்றியது. மகேந்திரன் திரும்பி அவனைப்

பார்ப்பதற்குள் அவன்மீது பாய்ந்தான். அவன் இடையில் இருந்த மாயக் குல்லாயைக் கப்பென்று எடுத்துப் பிரித்துத் தலையில் அணிந்து கொண்டான். எல்லாம் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் நடந்து விட்டது. மகேந்திரன் திருதிருவென்று விழித்தான்.

"நண்பா, சந்திரகாந்தா! உனக்குப் புண்ணியம் உண்டு! எங்கே இருக்கிறாய்? என்னிடம் அந்தக் குல்லாயைக் கொடுத்துவிடு. எனக்கு ஒன்றுமே தெரியவில்லையே" என்று கூவினான்.

சந்திரகாந்தனோ அரசியைக் கண்டு அவள்முன் வணங்கினான்.

அரசி புன்சிரிப்புடன், "நீங்கள் தான் மகேந்திரஜித்துடன் வந்தவரோ? பேஷ், பேஷ்! உங்கள் நண்பரையே ஏமாற்றிப் பலே சாமர்த்தியமாக என்னைப் பார்த்து விட்டீர்களே!" என்றாள்.

சந்திரகாந்தன் கம்பீரமாக நின்று, "அரசிளங்குமரியே! நண்பனை இதனால் நான் ஏமாற்றி விட்டதாக ஆகாது. உங்களைப் பார்த்தால்தான் நான் விரும்பும் மூன்று பொருள்களையும் நீங்கள் தருவீர்கள். அதற்காகத்தான் இந்த யுக்தியைச் செய்தேன்" என்று சொல்லிவிட்டு, அந்தக் குல்லாயைக் கழற்றி மகேந்திரனிடம் கொடுத்தான்.

அதிகம் வளர்த்துவானேன்? அந்தச் சபையில் அவனுக்கு ராஜோபசாரமெல்லாம் நடந்தது. மகேந்திரஜித் சந்தோஷம் கொண்டான்.

அரசிளங்குமரி சந்திரகாந்தனிடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்தாள். அங்கே உலவிய ஒவ்வொருவரையும் அதன் பிறகு அவனால் பார்க்க முடிந்தது. கடைசியாக அரசியே அவனைத் தன் ஆசனத் தருகில் அழைத்து அவனிடம் அந்த மாயக் குல்லாயையும் ஸ்வர்ண இறக்கைகளையும் மந்திரப் பையையும் கொடுத்து அனுப்பினாள். மோதிரத்தை மட்டும் திரும்ப வாங்கிக்கொண்டாள்.

வெளியே வந்ததும் அவன் ஸ்வர்ண இறக்கையை மாட்டிக் கொண்டான். உடனே ஒரு பறவையின் சக்தியைப் பெற்றுவிட்டது போல அவன் உணர்ந்தான்.

"நண்பா! யார் செய்த தவமோ! என்மீது உனக்கும். உன் சகோதரிக்கும் உள்ள அன்புக்கு நான் எப்படிப் பாத்திரமாகப் போகிறேன் என்று தெரியவில்லை. ஆயினும் சந்தர்ப்பம் வந்தால் என் உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுக்கத் தயங்க மாட்டேன்" என்றான்.

பக்கத்தில் மெல்லிய நகையொலி கேட்டது. மகேந்திரஜித்தின் சகோதரிதான்! "சரி; புறப்படுங்கள். நாளைத்தினம் பௌர்ணமி. அன்று தான் அசுண மா அரக்கியைக் கொல்ல முடியும் என்றாள்" அவள்.

மூவரும் காற்றிலே மிதந்து வடக்குத் திசையை நோக்கி, காரியத்தில் கண்ணுங் கருத்துமாய்ப் பறந்து போனார்கள். மகேந்திரஜித்தின் சகோதரி பத்மஜாவை மட்டும் சந்திரகாந்தனால் பார்க்கவே முடியவில்லை.

பௌர்ணமியன்று சமுத்திரத்தை அடைந்தார்கள். அந்தி நேரம் நெருங்கிவிட்டது. கிழக்கே சந்திரோதயம் ஆகிவிட்டது. சமுத்திர நீரெல்லாம் வெள்ளித் தகடு நெளிவதுபோல் நுரையைக் கரையில் தள்ளிக்கொண்டு உருண்டது.

திடீரென்று பத்மஜா, "அதோ அந்தத் தீவில்தான்" என்றாள்.

மகேந்திரனும் சந்திரகாந்தனும் கீழே கவனித்தார்கள். நிலவில் கருநீல வட்டம் போல ஒரு புள்ளி தெரிந்தது.

"இனி நீங்கள் மட்டுமேதான் செங்குத்தாக இறங்க வேண்டும். நாங்கள் இங்கேயே நிற்கிறோம்" என்றாள் பத்மஜா.

சந்திரகாந்தன் தன் தீரத்தைக் காட்ட வேண்டிய தருணம் நெருங்கி விட்டதை உணர்ந்தான். பெற்ற தாயை ஒருதரம் மனசால் நினைத்தான்.

உடனே பத்மஜா, "அசுணத்தைக் கண்ணால் பார்க்காதீர்கள். பார்த்தால் அவ்வளவுதான். கேடயத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள். ஞாபகம் இருக்கட்டும்" என்றாள்.

அப்போதுதான் அவனுக்கு அந்தக் கேடயத்தை முதலில் மகேந்திரன் தேய்க்கச் சொன்னதன் கருத்து விளங்கிற்று.

தூரத்தில் வரும்போதே கருநீலப் புள்ளிபோல இருந்த அசுணத்தின் பிரம்மாண்டமான பயங்கரத் தோற்றம் அவனுக்குக் கேடயத்தில் தெரிந்தது. அதன் தலைமயிரெல்லாம் உயிருள்ள பாம்புகள். தலை என்னவோ தூக்கத்தில் கவிழ்ந்து கிடந்தாலும் கொடிய கனவில் ஏதோ வேதனைப் படுவதுபோல அந்தப் பாம்புகள் கண்களை மூடியபடியே துள்ளிக் குதித்தன.

இந்த அசுணத்தைப்பற்றி முன்பே நான் உங்களுக்குச் சரியாகச் சொல்லவில்லை. அடடா! அதைப்போன்ற ஒரு கொடிய ராட்சஸ விலங்கு உலகத்தில் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. அதன் மூச்சுப்பட்டால்கூட ஒரு நகரமே அழிந்துவிடும். ஆகாய வீதியில் அது பறந்து செல்லும்போது யாராவது அண்ணாந்து பார்த்தால் போதும். உடனே அப்படியே கற்சிலையாக நிற்க வேண்டியதுதான். அப்படிப்பட்ட கொடிய ராட்சஸ விலங்கின் தலையைத்தான் விஷாலன் கெட்ட எண்ணத்துடன் கொண்டுவரச் சொல்லியிருந்தான்.

சந்திரகாந்தனுக்குத் தன் லட்சியம் ஒன்றே குறியாக இருந்ததால் அவன் மனசில் ஒருவிதமான பயமும் இல்லை. நேராகக் கேடயத்தில் பிரதிபலித்த பிம்பத்தைக் குறியாகக்கொண்டு சிறிதும் யோசிக்காமல் சுருள்வாளை எடுத்து வீசினான். விலங்கு கண் விழித்துக் கொண்டுவிட்டது. ஆனால் அதற்குள் அதன் தலை தனியாகப் புரண்டது. பாம்புகள் எல்லாம் துள்ளிக் கொண்டே யிருந்தன. அப்போதுதான் சந்திரகாந்தன் சரியாகக் கவனித்தான். அசுணத்தைப் போலவே மற்றொரு கொடிய அசுணமும் அதன் அருகில் தூங்கிக் கொண்டிருந்தது. அது இந்தச் சத்தத்தைக் கேட்டு விழித்துவிட்டது. அது பழி வாங்க எண்ணி, அண்டமே அதிரும்படி ஒரு கர்ஜனையுடன் புரண்டது. அதற்குள் சின்னஞ் சிறியதாக வைத்திருந்த மந்திரப் பையைத் திறந்தான் சந்திரகாந்தன். என்ன அதிசயம், வெட்டுண்ட அசுணத்தின் தலை அதற்குள் நுழைந்துவிட்டது. அப்போதும் அதை அவன் நேருக்கு நேராகப் பார்க்காமல் விர்ரென்று உயரே எழும்பினான். மற்றொரு அசுணமோ வெகு தூரம்வரை அவனைத் துரத்திப் பார்த்தது. ஆனால் சந்திரகாந்தன்

மாயக்குல்லாய் அணிந்திருந்ததால் எந்தப் பக்கமாய்த் துரத்துவது என்று தெரியாமல் அது கலங்கித் தவித்தது. அதற்குள் சந்திரகாந்தன் தன் நண்பர்களை அடைந்தான். "பொழுது விடிவதற்குள் நாம் விஷாலனுடைய தீவுக்குப் போய் விட வேண்டும். பிறகு மாலையில் ராஜசபையில் நாங்கள் உங்களைச் சந்திக்கிறோம்" என்றாள் பத்மஜா.

* * *

ஊரெங்கும் ஒரே அமளி குமளிப்பட்டது. "இந்தப்பயலாவது, அசுணத்தைக் கொன்று தலையைக் கொண்டு வருவதாவது!" என்றெல்லாம் பேசிக்கொண்டார்கள். அரசனை நேராகப் போய்ப் பார்த்தான் சந்திரகாந்தன்.

"என்ன, கொண்டுவந்து விட்டாயா?" என்று திடுக்கிட்டான் விஷாலன்.

"ஆமாம். சாயங்காலம் நகர மக்களைக் கூடும்படி சொல்லுங்கள். அந்த மாபெரும் சபையில் எல்லார் முன்னிலையிலும் கொண்டு வருகிறேன்" என்றான்.

நகரமெங்கும் இந்த விஷயத்தைப் பறை சாற்றினார்கள். சாயங்காலம் கொடியவர்களான நகர மக்கள் அனைவரும் கூடினார்கள். அரசன் வந்து அமர்ந்ததும், "எங்கே கொண்டு வா, அசுணத்தின் தலையை!" என்று கட்டளையிட்டான்.

"அரசே! கொண்டு வருகிறேன். ஆனால் இந்தப் பையைவிட்டு அதை வெளியே எடுப்பது ஆபத்து!" என்றான் சந்திரகாந்தன்.

"அடே, அளக்காதே! பொய்! எடு வெளியிலே" என்று ஆரவாரம் செய்தார்கள் ஜனங்கள்.

அரசனும், "அடே தப்பி! என்ன கயிறு விடுகிறாய்? உம்..வெளியில் எடு! இல்லாவிட்டால் உன் தலை இங்கே நிலத்தில் உருண்டுவிடும்" என்றான்.

"எடுங்கள்" என்று ஒரு பெண்ணின் குரல் அவன் காதருகில் கேட்டது. அது பத்மஜாவின் குரல் என்று அவனுக்குத் தெரியாதா?

உடனே கண்களை மூடிக் கொண்டு சந்திரகாந்தன் பையைத் திறந்தான். அவ்வளவுதான்! அடுத்த கணம் அரசன் விஷாலன் உட்பட எல்லா ஜனங்களும் அப்படியே கல்லாகச் சமைந்து போனார்கள்.

கலகலவென்று சிரிப்புக் கிடையே, "ஒழிந்தான் கொடுங்கோல் விஷாலன்!" என்று முன்னே வந்தான் மகேந்திரன்.

"நமஸ்காரம்" என்று குரல் வந்தது. திருப்பினான். பதுமத் தீவின் அரசியான அந்த அரசிளங்குமரி அங்கே தென்பட்டாள்.

"அப்பா சந்திரகாந்தா! முன்னே, 'என் உடல், பொருள், ஆவி மூன்றையும் கொடுக்கத் தயார்' என்று சொன்னாயே; ஞாபகமிருக்கிறதா? அந்த மூன்றையும் இதோ, இவளுக்குக் கொடு! இவள்தான் என் சகோதரி பத்மஜா; பதுமத்தீவின் அரசியும் இவள்தான்!" என்றான் மகேந்திரஜித்.

"நீதானா?" என்றான் சந்திரகாந்தன். "குழந்தைகளே! நீங்கள் என்றென்றும் சிரஞ்சீவியாக இருங்கள்" என்று சந்திரகாந்தனின் கையையும் பத்மஜாவின் கையையும் சேர்த்து வைத்தாள் அவன் தாய். பத்மஜாவின் முகம் தாமரைபோல் மலர்ந்தது.

காமதேனு

விஜயா

குழந்தைகளே, கேளுங்கள்: என்ன ஆச்சரியம்! முன் காலத்தில் பசுமாடெல்லாம் நம்மைப் போல் பேசுமாம். இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஓர் ஊரில் ஓர் ஏழைப் பிராம்மணன் இருந்தானாம். அவன் பெயர் ராமன். வீட்டில் அவன், அவன் மனைவி-இந்த இரண்டே பேர்தான். மனைவியின் பெயர் லக்ஷ்மி. அவர்கள் மிகவும் ஏழைகளானதால் வீட்டில் ஒன்றுமே கிடையாது. லக்ஷ்மி அம்மாளுக்குப் பசு மாடென்றால் மிகவும் பிரியம். ஒன்று வாங்கி வளர்க்க மிகவும் ஆசைப்பட்டாள்.

ஒரு நாள் அவள் ராமனிடம் அதைப்பற்றிக் கேட்டாள். "எப்படியோ கஷ்டப்படுகிறோம். எப்படியாவது ஒரு பசு மாடு வாங்கிவிடுங்கள். நமக்கும் பால் கிடைக்கும். அதிகமாக இருப்பதைக் கொடுத்து இரண்டு காசும் சம்பாதிக்கலாம். புண்ணியமும் உண்டு" என்றாள்.

அந்தக் காலத்தில் எல்லாம் பசுமாடு அதிக விலை இல்லை. பத்துப் பதினைந்து ரூபாயில் கூட ஒன்று கிடைக்கும். எப்படியோ வயிறு வாயை அடக்கிக் கொண்டு ராமன் ஒரு நல்ல அழகிய பசு மாடாய்ப் பார்த்து வந்தான். நல்ல வெள்ளைப் பசு; அழகிய இளங்கன்று. மாடு வரப் போகிறது என்று கேட்டதுமே தனக்கு எல்லா ஐசுவரியமும் பொங்கிவிட்டதாக எண்ணினாள் லக்ஷ்மி. ஒரு நல்ல நாள் பார்த்து வெள்ளிக்கிழமையில் பசு வீடு வந்து சேர்ந்தது. அதற்குக் 'காமதேனு' என்று பெயர் வைத்தார்கள். லக்ஷ்மி அதற்கு மஞ்சள், குங்குமம் இட்டு, பூச் சூட்டி ஆரத்தி சுற்றி, அன்புடன் அழைத்துக் கொஞ்சினாள்.

ராமன் வெளியில் சென்று விடுவான். லக்ஷ்மிக்கு எப்போதும் பசுமாட்டுடன்தான் வேலை. அதைத் தடவுவாள், தேய்ப்பாள், கொஞ்சுவாள். தன் குறையோ, நிறையோ எல்லாவற்றையும் அதனிடம் சொல்லிக்கொள்ளுவாள். அந்த நாளில் பசுமாடு பேசுமாம். பொழுதுக்கும் பாட்டுக்கும் அவளிடம் தன் கதையையெல்லாம் சொல்லும். 'காமதேனு' என்றால் ஓடி ஓடிவரும். அதன் எதிரில் தன் கஷ்டங்களையெல்லாம் மறந்துவிட்டாள் லக்ஷ்மி அம்மாள்.

பாலும் வேண்டியது தந்தது. அதை வெளியில் விற்றுக் கொஞ்சம் பணமும் சம்பாதித்தாள் லக்ஷ்மி அம்மாள். வரவர ராமனுக்கும்

காமதேனுவைக் கண்டால் உயிராகிவிட்டது.

ஒரு நாள் ராமன் வெளியிலிருந்து வரும்போதே தலைவலி என்று சொல்லிக் கொண்டு வந்தான். கொஞ்சம் ஜுரமும் வந்துவிட்டது. லக்ஷ்மி அம்மாளுக்குக் கவலை உண்டாகிவிட்டது. காமதேனு லக்ஷ்மிக்குத் தைரியம் சொல்லுவதை விட்டுவிட்டு முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தது. ஒரு வாரம் ஆகியும் ராமனுக்கு ஜுரம் விடவில்லை. லக்ஷ்மி என்ன செய்வதென்று தோன்றுமல் தவித்தாள். காமதேனுவிடம் சென்று, "ஒரு வாரமாகியும் அப்படியே இருக்கிறதே, என்ன செய்வது? கையில் பணமும் இல்லை. நீதான் ஒரு வழி சொல்லவேண்டும்" என்று கேட்டாள் லக்ஷ்மி. முதலில் காமதேனு முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டது. அதற்குத் தாங்க முடியாத வேதனை உண்டாயிற்று. லக்ஷ்மி அம்மாள் கஷ்டப்படுவதை அதனால் பார்க்க முடியவில்லை. சிறிது நேரம் கழித்து, "அம்மா, எனக்கும் வேதனையாக இருக்கிறது. என்னால் முடிந்த ஒரு சிறு காரியம் சொல்லுகிறேன்; என்னை யாருக்காவது கொடுத்துவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு மாமாவுக்கு வைத்தியம் செய்யுங்கள்" என்றது. இதைக் கேட்டு லக்ஷ்மி அம்மாள், 'கோ' என்று அழுதுவிட்டாள். "காமதேனு, என் உயிர் போனாலும் உன்னை விடவே மாட்டேன்" என்று அதைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

உள்ளூர் வைத்தியரை அழைத்து வந்து ராமனைக் காண்பித்தாள். அவருடைய வைத்தியத்தாலும் ஒன்றும் பயனில்லை. ஜுரம் அதிகமாகி வந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தாள் லக்ஷ்மி அம்மாள். மாலை; விளக்கு வைக்கும் நேரம். பாலும் கறந்தாகிவிட்டது. அப்போது காமதேனு ஏனே வாய் ஓயாமல் கத்திற்று. "அம்மா, சீக்கிரம் இங்கே வா" என்று கூப்பாடு போட்டது.

லக்ஷ்மி அம்மாள் திகில் அடைந்து ஓடினாள். காமதேனுவுக்கு என்ன நேர்ந்துவிட்டதோ என்று பதைபதைத்தாள். காமதேனுவின் அருகில் வந்ததும் அது சொன்னதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். "அம்மா, ஒரு விஷயம் சொல்கிறேன். அதற்காகக் கலங்கவேண்டாம். சாதாரணமாய் உங்களுக்கெல்லாம் தெரியாத விஷயம் எங்கள் கண்ணுக்குத் தெரியும். எமன் எங்கு வருவதும் தெரியும். இப்போது அவன் நம் வீட்டை நோக்கி வருவது தெரிகிறது. அதைச் சொல்லத்தான் உன்னை அழைத்தேன்.

இப்போது என்ன செய்வது என்று எனக்கே தெரியவில்லை. துக்கம் என் மார்பைப் பிளக்கிறது" என்றது. யாரை அழைப்பதென்று லக்ஷ்மிக்குத் தெரியவில்லை. யாரைக் கூப்பிட்டுத்தான் என்ன பயன்?

காமதேனுவைக் கட்டிக்கொண்டு, "உனககு இவ்வளவெல்லாம் தெரிகிறதே, காமதேனு. இதற்கு ஒரு வழியும் சொல்லமாட்டாயா?" என்று மன்றுடினுள் லக்ஷ்மி. காமதேனுவும் கண்ணீர் சொரிந்துகொண்டு சிறிது யோசித்தது. பிறகு, "அம்மா அழாதே, எழுந்திரு, சொல்லுகிறேன்" என்றது. லக்ஷ்மி எழுந்தாள்.

"அம்மா, என் பால் அமிர்தத்துக்குச் சமம் என்பது உனக்குத் தெரியுமல்லவா? அதை அலக்ஷ்யம் செய்ய எவராலும் முடியாது. இந்த எமனுலும் முடியாது. மறுபடியும் என்னிடம் கொஞ்சம் பாலைச் சீக்கிரம் கறந்துகொள். அதை எடுத்துக்கொண்டு வீதி வாசற்படியில் வை. பிறகு பார்க்கலாம், எமனின் தைரியத்தை!" என்றது.

லக்ஷ்மியம்மாளும் அதன்படியே பாலைக் கறந்து நுரையுடன் ஒரு செம்பில் எடுத்துப் போய், வீதி வாசற்படியில் வைத்தாள். அவள் கண்ணுக்கு எல்லாம் எப்போதும் போலவே இருந்தது. காமதேனுவுக்கு மட்டும் எல்லாம் நன்ருகத் தெரிந்தது. வேகமாய் வீட்டை அணுகிய எமன் வாசற்படியில் அசைவற்று நின்ருன். நுரைப் பாலைத் தாண்டிக்கொண்டு வர அவனுல் முடியவில்லை. புன்சிரிப்புடன் கொட்டகையில் நின்ற காமதேனுவை எமன் கண்டான். 'எல்லாம் இதன் வேலைதான்' என்று பல்லை 'நற நற' என்று கடித்தான். "என் காரியத்தில் தலையிட உனக்கு இத்தனை தைரியமா? உன்னை விட்டேனு பார். ராமனை விட்டால் உன்னைப் பிடிக்கிறேன்" என்று கோபத்தோடு காமதேனுவைப் பார்த்து, "இனிமேல் உங்கள் இனத்தாருக்கே பேச்சு அடைத்துப் போகட்டும்" என்று கடுமையான சாபம் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்ருன்.

காமதேனு வாயடைத்து நின்றது. ராமன் குணமடைந்தான். லக்ஷ்மியம்மாளின் மனம் குளிர்ந்தது. காமதேனு தன் கடமையைச் செய்து முடித்தது. ஆனுல் தன் பேசும் சக்தியை இழந்துவிட்டது. ராமனுக்கும் லக்ஷ்மியம்மாளுக்கும் துக்கம் தாங்கவே முடியவில்லை. பேச முடியாவிட்டாலும் காமதேனு, "மா, மா" என்ற கத்தலில் தன் எஜமான் பிழைத்த சந்தோஷத்தை வெளியிட்டது. அது முதல் ராமனும் லக்ஷ்மியம்மாளும் காமதேனுவை இன்னும் அதிக அன்புடன் வளர்த்தார்கள்.

211779

திருச்சிக் கூட்டம்

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். தாங்கள் 26-1-51 அன்று திருச்சியில் நடத்திய திருவிழாவில் எனக்கு 'பாகடெல்லி போர்டு' பரிசு கிடைத்தது. அது எனக்குச் சிறந்த பொழுதுபோக்காய் இருப்பதுடன் என் வீட்டாருக்கும் மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. இத்தகைய அற்புதப் பரிசை அளித்த தங்களுக்கும் கண்ணன் கழகத்துக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இங்ஙனம், R. கேசவலு, (K. 896), திருச்சி.

* * *

பேனா நண்பர்கள்

தபால் தலை சேகரிப்பவர்கள் ரமணி ஹரிஹரன், c/o Dr. V. ஹரிஹரன், L.M.P., ஆரணி - என்ற விலாசத்துக்கு எழுதலாம். நாகப்பட்டினத்தில் பேனா நண்பன். டி. ஜனார்த்தனம், 5, மாரியம்மன் கோவில் தெரு, நாகப்பட்டினம்.

* * *

கண்ணன் ஆசிரியர் அவர்களே!

வணக்கம். ஜாங்கிரியின் இனிப்பை எழுதுவதா, மிக்சரின் ருசியை எழுதுவதா, பழத்தின் சுவையை எழுதுவதா, டீயின் மணத்தை எழுதுவதா, விளையாட்டுப் போட்டிகளின் சுவாரஸ்யத்தையோ, பிரசங்கங்களின் பெருமையையோ எழுதுவதா, பரிசளித்த பரிசுகளின் சிறப்பை எழுதுவதா, விகடக் கச்சேரியின்போது நாங்கள் வயிறு வெடிக்கச் சிரித்ததை எழுதுவதா, இவ்வளவும் போதாதென்று கடைசியில் பெப்பர்மின்ட் பாக்கெட் ஒன்றும் கொடுத்து அனுப்பி எங்கள் மனப் பசி, அறிவுப் பசி, வயிற்றுப் பசி எல்லாவற்றையும் திணறத் திணற அடித்துவிட்டீர்களே அதை எழுதுவதா, எனக்கு ஒன்றுமே தெரியவில்லை போங்கள்! நீங்கள் மகா பொல்லாதவர்கள்!

—ஆர். ராஜம், சின்னக்கடைவீதி, திருச்சி.

(கண்ணன் கழக நம்பரைக் கொடுக்காததால் உன் பெயரிலிருந்து நீ ஆண் குழந்தையா, பெண்குழந்தையா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. நீயும் மகா பொல்லாதவ-ன்-ள் தான்! போ! ஆ-ர்.)

அன்புள்ள கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு, அநேக நமஸ்காரங்கள். நான் 26-1-51 அன்று கூட்டத்துக்கு வந்திருந்தேன். பெப்பர்மின்ட்டும் ஜாங்கிரியும் இன்னும் இனித்துக்கொண்டே இருக்கின்றன. 'கதையும் புதிரும் நிறைந்தது கண்ணன்' என்பது இன்னும் என் மனத்தில் தோன்றிக்கொண்டே இருக்கிறது. இரவு முழுதும் தூக்கம் வரவில்லை. இதே நினைவுதான். இன்னும் ஒரு முறை அவசியம் வாருங்கள்.

—T. K. ராமசந்திரன், (R. 108), திருச்சி.

* * *

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். எங்கள் ஊருக்கு வந்து கூட்டம் போட்டதைப்பற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சி.

—M. K. சங்கர், (S. 588), திருச்சி.

* * *

மனமார்ந்த வணக்கம்.

26-1-51 வெள்ளிக்கிழமை குடியரசு நாள் அன்று திருச்சி, நேஷனல் காலேஜில் நடந்த கண்ணன் கழகக் கூட்டம் ரொம்ப ஜோராக இருந்தது. அடுத்த கூட்டம் எங்கே? அதற்கும் நான் வரப்போகிறேன்.

—A. விசுவநாதன், (V. 132), லால்குடி

(மதுரையிலோ, கோயம்புத்தூரிலோ நடந்தால் கூடவா?—ஆ-ர்.)

* * *

கண்ணன் ஆசிரியருக்கு,

நான் அடுத்துவரும் கண்ணன் கூட்டம் பம்பாயில் கூடவேண்டுமென்று கடவுளை நினைக்கிறேன். கடவுளும் கண் திறப்பார் என நினைக்கிறேன். நீங்களும் அடுத்த கூட்டத்தைப் பம்பாயில் நடத்துவீர்கள் என நினைக்கிறேன். பம்பாயில் நிறைய அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

—S. பார்வதி, (P. 78), பம்பாய்.

* * *

குழந்தை இலக்கியக் கழகம், சென்னை-7.

இந்தக் கழகத்தின் துவக்க விழா பொங்கல் அன்று நடைபெற்றது. தலைவராகத் தூத்துக்குடி க. கண்ணுச்சாமியும், உபதலைவராக ஜெ. எதிராசனும், செயலாளர்களாகச் சொர்ணவேலுவும் பூவண்ணனும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

—பி. சொர்ணவேலு, பூவண்ணன்—செயலாளர்கள்.

* * *

பரிசீலனை செய்யவேண்டும்!

எலிமெண்டரி ஸ்கூல்களில் 6, 7, 8 வகுப்புக்களுக்கு நடத்தும் பரீட்சைகளில் விடை திருத்தியதும் மார்க்கை மட்டிலும் சொல்லி, விடைத்தாளை அனுப்பாதிருக்கிறார்கள். திருத்திய தாளை அனுப்பினால் அதில் என்ன தவறு செய்திருக்கிறோம் என்று பார்த்து, இனிமேலாவது அப்படிச் செய்யாதிருக்கலாம். ஆகவே இந்த யோசனையைப் பரிசீலனை செய்து விடைத்தாளையும் தர ஏற்பாடு செய்வார்களா?

—P. அகமது முகைதீன், (A. 60), ஏர்வாடி.

கடிகாரப் பாட்டு

சுவரில் ஒரு கடிகாரம்பார்
ஜோரா யிருப்பதை நீயேபார்
முத்தைப் போலுள்ள எழுத்தைப் பார்
எண்ணி அதையும் சற்றுப் பார்
ஒன்று முதல்பனி ரண்டுவரை
ஒழுங்கா யிருப்பதை எண்ணிப்பார்
மணிமுள் ஒன்றும்மற் றொருமுள்ளும்
சுற்றி வருவதைக் கற்றுக்கொள்
சிறுமுள் மணியைக் காட்டுவதாம்
பெருமுள் நிமிஷம் ஓட்டுவதாம்
அறுபது விநாடி ஒரு நிமிஷம்
அறுபது நிமிஷம் ஒரு மணியாம்
டிக்டிக் கென்ற சத்தமுடன்
நில்லா தாடும் குண்டைப் பார்
காலமும் தடத்தைக் கடக்கிறதாம்
இதை எண்ணி நாமும் படித்திடுவோம்.

(பெயர் எழுதவில்லை.)

* * *

சர்க்கஸ் புலி

ஒரே கோட்டில் வரைந்த படம்

டி. வி. ரங்கசாமி, ஆரணி.

விடுகதை

சின்னஞ் சிறியபயல் செய்ந்நன்றி போற்றுபயல்
அன்னை யினுமதிக அன்புபயல்-உன்னிடத்து
நாடோறுங் கொஞ்சுபயல் நல்லவழி காட்டுபயல்
ஓடோடி தேடுபயல் யார்?

—(வே. ப. பாபுல்- அரூர்.)

விடை—ராமு

* * *

ஒரு திருத்தம்

சென்ற இதழில் முக்கோணங்கள் விடையில் சில பிழைகள் தென்படுகின்றன. அவற்றைக் கீழ்க்கண்ட மாதிரி திருத்திக்கொள்ள வேண்டும்: (33) 3-5-8. (38) 2-4-10. (43) 2-3-6. இந்தப் பிழைகளை முதலில் கண்டுபிடித்து எழுதிய கும்பகோணம், ராமன் ராமன் கம்பெனி, N. சிவராமனுக்குப் பலபல பாராட்டுக்கள். (ஆ-ர்.)

* * *

எந்த வருஷமானாலும் கிழமை கண்டு பிடிக்கலாம்!

கீழே ஒவ்வொரு மாதத்துக்கும் ஒவ்வோர் எண் தரப்பட்டிருக்கிறது.

ஜனவரி—7	மே—1	செப்டம்பர்—5
பிப்ரவரி—3	ஜூன்—4	அக்டோபர்—7
மார்ச்—3	ஜூலை—6	நவம்பர்—3
ஏப்ரல்—6	ஆகஸ்டு—2	டிசம்பர்—5

இந்த எண்கள் ஞாபகத்தில் இருக்கவேண்டும். எந்த வருஷம் சொல்லுகிறீர்களோ அதையும், அந்த வருஷத்தை 4-ஆல் வகுத்த தொகையையும் அந்த மாதத்தின் எண்ணையும், சொல்லுகிற தேதியையும் கூட்டி, 7-ஆல் வகுக்க வேண்டும். மீதி வருவதை, சனிக்கிழமை முதல் ஆரம்பித்து, கிழமையைச் சொல்லிவிடலாம்.

உதாரணம்: 1951-ஆம் வருஷம் ஜூன் மாதம் 14-ஆம் தேதி என்ன கிழமை என்றால்,

வருஷம்	1951	
4-ஆல் வகுக்க	487	மீதி 3 வருவதைத் தள்ளிவிடுக.
ஜூன் மாத எண்	4	
தேதி	14	
	2456	இதை 7-ஆல் வகுத்தால் 350-6

மீதி 6 வருவதால் வியாழக்கிழமை.

குறிப்பு: லீப் வருஷமாய் இருந்தால் மீதியை வெள்ளியிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

—T. K. ராமசந்திரன், தின்னியம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

பார்சல் விளையாட்டு

இந்த விளையாட்டை ஆரம்பிப்பதற்கு முன்னால் ஒரு பார்சல் தயார் செய்துகொள்ளவேண்டும். இந்தப் பார்சல் எவ்வளவுக்கு எவ்வளவு பெரிதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிக நேரம் விளையாடலாம். இந்த விளையாட்டில் ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால் ஆட்டத்தின் முடிவில் தலைக்கு ஒரு பெப்பர்மிண்ட் கிடைக்கும்!

நீங்களெல்லாரும் வட்டமாக உட்கார்ந்து கொள்ளவேண்டும். உங்களில் ஒருவன் தலைவனாக, தனியே வெளியில் ஊதலை வைத்துக் கொண்டு நிற்பான். யாராவது ஒருவன் கையில் பார்சல் இருக்கும். அவன் அந்தப் பார்சலின் மேல்கடுதாசியைப் பிரிக்கப் பார்ப்பான். அவன் பிரிக்கும் சமயம் பார்த்து, தலைவன் ஊதலை எடுத்து ஊதுவான். ஊதல் சத்தம் கேட்டவுடன் பார்சலை வைத்திருப்பவன் அதை அடுத்தவன் கையில் கொடுத்துவிட வேண்டும். தலைவன் ஊதுவதற்குள் இவன் அதைப் பிரிக்கப் பார்ப்பான்

ஆனால் பிரிக்கப் பிரிக்கப் பார்சல் வேறு வேறு காகித உறையில் சுற்றியிருப்பது தெரியும். ஒவ்வொருவரும் மாற்றி மாற்றிப் பிரிக்க, பார்சல் வளர்ந்துகொண்டே போகும்.

எல்லா உறையையும் பிரித்த பிறகு, கடைசியில் ஒரு பெப்பர்மிண்ட் பொட்டலம் இருக்கும். அதை நீங்கள் தலைக்கு ஒன்றாகப் பகிர்ந்துகொள்ளலாம்.